Chundikuli Branch Library

பாதுகாவலன்
PATHUKAVALAN

## முதலாமிடம்

பாதுகாவலன் பத்திரிகை வாசனையை ஊக்குவிக்கும் பங்குகளில், அச்சுவேலி முதலாம் இடத்தில் உள்ளது. அச்சுவேலிப் பங்கில் வாரம் தோறும் 240 பத்திரிகைகள் விற்பனையாகின்றன. பங்குத் தந்தை அருள்திரு. பேனுட் றெக்னேவுக்கும் பங்கு மக்களுக்கும் எமது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மலர் 114 இதழ் 18 15-7-1988 (யூலை 15-யூலை 22) பிரதி ரூபா 1-00 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

நற்சமூக நடுநிலையத்தில் உரையாற்றிய யாழ்ப்பாண தெ.இ.தி. ஆயர் டி.ஜே. அம்பலவாணர் கருத்து:

10 AUG 1988

# 450 ஆண்டுகள் காலனித்துவ ஆட்சியே சுதந்திரம் பறிபோகக் காரணமாயிருந்தது

**அந்நிய ஆட்சியின் கீழ் நீண்ட காலமாக வாழ்ந்துவிட்ட இலங்கைத் தமிழ் மக்கள், ஆளுகிறவர்களுக்கு எதிராக என்ன செய்ய முடியும் என்ற நிலையில், பிழைத்துக்கொள்ளப் பழகிக்கொண்டனர். We have inherited a colonial mentality. நாம் காலனித்துவ எண்ணத்தைத் தழுவிக்கொண்டோம். எனவேதான் எமது சுதந்திரம் பறிக்கப்படுகிறது என்ற கருத்தை முன் வைத்தார் யாழ். தெ. இ. தி. ஆயர் டி. ஜே. அம்பலவாணர் அவர்கள்.**

''இன்றைய சமூக நிலையில் திருச்சபை'' என்ற தலைப்பில் யாழ். நற்சமூக நடுநிலையத்தில் இம்மாதம் 9ஆம் திகதி காலை யாழ்ப்பாண தென் இந்திய திருச்சபை ஆயர் கலாநிதி டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் உரைநிகழ்த்தினர்.

''இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினை நீங்க வழி என்ன?'' என்ற வினவுக்கு விடைகாண முனைந்த ஆயர் அவர்கள் ''இந்த நாட்டில் தமிழ் மக்களாகிய எமக்கு ஒரு இடம் உண்டு. தமிழ் மக்களாகிய நாம் இந்த இலக்கை உணர்ந்து, நாட்டின் பொற்காலத்துக்காக உழைக்கவேண்டும்'' என்றார்.

தமிழ் மக்களின் வரலாற்றை ஆராய்ந்த ஆயர் அவர்கள், 1948ஆம் ஆண்டுவரை 450 ஆண்டுகள் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியரால் ஆளப்பட்டதன் பெறுபேருக, காலனித்துவ மரபைத் தழுவிக் கொண்டோம். ஆளுகிறவர்களுக்கு எதிராக, அவர்களுக்கு விரோதமாக என்ன செய்ய முடியும் என்றநிலையில் பிழைத்துக்கொள்ள வழிதேடினோம். சிங்களவருடைய ஆட்சியின் கீழும் அதே நிலையில் பிழைத்துக்கொள்ள வழிதேடி வாழ்ந்து வருகிறோம். இங்கு இயலாத நிலை வந்தபோது வெளிநாடுகளில் கறுத்த அடிமைகளாகவும் வாழப் பலர் துணிந்துள்ளனர். முழுச்சமுதாயத்தையும் பாதுகாக்கவேண்டும் என்ற எண்ணத்தை மறந்து, ஓடிச்சென்று [illegible]டுகளில் பிழைக்கு[illegible]

''கடந்த 15 ஆண்டுகளில் இளைஞர் இயக்கங்களால் வந்த மாற்றத்தால், இப்போது சுயாதீனராக, சுதந்திரமாக வாழ ஒரு இலக்கைத் தெரிந்து கொண்டனர்.''

''உலகில், இந்த நாட்டில் எமக்கு ஒரு இடம் உண்டு. தமிழ் மக்களாகிய நாம் இந்த [illegible] வேண்டும்'' என்றார்.

## ஆலய விழாவில் விருத்தம்

கரம்பொன் பங்கின் பாதுகாவலராம் புனித செபஸ்தியார் திருநாள் பல ஆண்டுகளின் பின் இவ்வாண்டு 10-7-88 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

பங்குத்தந்தையின் அனுமதியுடன், பண்டைய வழ[illegible]விருந்த திரை விருத்த[illegible] தேவாரம், பிரியதத்தமந்திர[illegible] கீர்த்தனை என்பன பாடப்பட்டமை சிறப்பம்சமாக விளங்கியது.

தகவல்– எஸ். எம். ஜே

## புதிய உலகம்

ஆனி 1988 ''புதிய உலகம்'' வெளிவந்துவிட்டது. சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளாதவர்களுக்கு சஞ்சிகை அனுப்பி வைக்கப்படமாட்டாது. நற்சமூக நடுநிலையம், 115, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பிப் புதிய உலகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஆண்டு சந்தா ரூபா 30/=

## இறைபணிச்சபை கருத்தரங்கு

பாசையூரில் இயங்கும் பக்திச் சபைகளாகிய மரியாயின் சேனை (இளைஞர்–முதியோர்) பிரசீடியங்கள், மாதா கூட்டம், புனித வின்சன்டிபோல் சபை, திரேசம்மாள் கூட்டம், புனித அந்தோனியார் பாடகர் குழாம், பூசைப்பரிசாரகர் ஆகிய சபைகளின் அங்கத்தவர்களை உள்ளடக்கிய கருத்தரங்கு பாசையூர் பங்கு மண்டபத்தில் இம்மாதம் 9ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் புனித வின்சன்டிபோல் சபைத் தலைவர் திரு. லோ.வ.பிலிப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருள் திரு.யோண் பிரான்சீஸ் அடிகளார் இறைவணக்கத்துடன் ஆரம்பித்துக் கருத்தரங்கின் நோக்கம் பற்றிக் கூறினர். சிறப்புப் பேச்சாளராக புனித வின்சன் டி போல் மத்தியசபையின் தலைவர் ஆசிரியர் C. R. யோசப் அவர்களும், அமிர்தநாதர் சந்தியாப்பிள்ளை அவர்களும் கலந்து கொண்டார்கள்.

திரு. C. R. யோசப் தமது உரையில் ஒரு கிராமத்தில் எத்தனை சபைகளிருந்த போதிலும் அவைகளின் நோக்கம் ஒன்றே. ஆகவே போட்டி பொருமையின்றி எல்லாம் ஒன்றிணைந்து இறைபணியைச் செய்யவேண்டுமெனக் கூறினர்.

திரு. சந்தியாப்பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில் பக்திச் சபைகள் என்பதிற்குப் பதிலாக இறைபணிச்சபைகளெனக் கூறுவது பொருத்தமாகுமெனவும் இச்சபையிலுள்ளவர்கள் முதற்கண் தங்களது வாழ்க்கையின் மூலம் மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாக விளங்க வேண்டுமெனவும் போதனையிலும் சாதனையே சிறந்ததெனவும் கூறினர்.

P. P. பிறின்ஸ்

யாழ். மறைவட்ட முன்னாள் ஆயர்

## ஜெறோம் எமிலியானுஸ் ஆண்டகை

அவர்களின்

### பதினாறாவது ஆண்டு நினைவஞ்சலி

| | |
|---|---|
| பிறப்பு | 20-7-1901 |
| குருத்துவம் | 7-7-1929 |
| துணை ஆயர் | 22-5-1949 |
| ஆயர் | 18-7-1950 |
| இறப்பு | 17-7-1972 |



**18-7-1988**

திங்கள் காலை 6-15 மணிக்கு

யாழ். ஆயர் தலைமையில் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

## வருந்துகிறோம்

8-7-88 பாதுகாவலன் இதழில் முன் பக்கத்தில் அருட்சகோதரர் S. அமிர்தநாதர் C. R. இறைபதம் எய்திய செய்தி வெளியானது. ஆனல் அதன் தலைப்பு தவருக அருட்சகோதரர் சாமிநாதர் C. R. இறைபதம் அடைந்தார் என குறிப்பிடப்பட்டிருந்தது. இத்தவறுக்காக வருந்துகிறோம்.

ஆசிரியர்.

## மறைக்கல்வித் தினம்

24-7-88 ஞாயிறு தேசிய மறைக்கல்வித்தினம் ஆகும். அன்றைய தினம் இலங்கை முழுவதும் ஆலயங்களில் சேர்க்கப்படும் ஞாயிறு திருப்பலிக் காணிக்கை மறைக்கல்விப் பணிக்காகப் பயன்படுத்தப்படும்.

## கிளிநொச்சிப் பங்கின் சிற்பி

அமரர் அருள்திரு. V. S சூசைநாதர் O. M. I.

18—7—88

அடிகளார்

இறைபதமடைந்த

25 ஆண்டு நிறைவு.

கிளிநொச்சி

புனித திரேசம்மாள்

ஆலயத்தில்

காலை 9-00 மணிக்கு

திருப்பலியும்

பொதுக்கூட்டமும்

இடம் பெறும்.



கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

## எங்கருத்து

### பழக்கம் பெரிதா ?

மலையுடன் மோதுவது மடமை என்ருற் போல், ஆற்றலுக்கும் சக்திக்கும் அப்பாற்பட்ட ஆட்சி நிலவுகின்ற போது, அதனை உடைத்தெறிய முடியாத சூழ்நிலையில், அடிபணிவதே இயற்கை. எமது தாய்த்திருநாடு 1948வரை 450 ஆண்டுகள் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆட்சிக்குட்பட்டு இருந்த வேளையில், நாம் ஆளுகின்றவர்களுக்கு எதிராக என்ன செய்ய முடியும் என்ற நிலையில் பிழைத்துக் கொள்ள வழி தேடினேம். 1948ஆம் ஆண்டுக்குப் பின்னும் அதே பாணியிலேயே சிங்கள அரசுகளுக்குக்கீழ் இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கருதப்பட்ட போதிலும் தமிழ் மக்கள் நாம் பிழைத்துக்கொள்ள வழிதேடிக் கொண்டோம்.

''நாம் ஒரு காலனித்துவ எண்ணத்தைத் தழுவிக் கொண்டோம்'' (We have inherited a Colonial Mentality) என்கிருர் யாழ்ப்பாண தென் இந்திய திருச்சபை ஆயர் அதிவண. அம்பலவாணர் அவர்கள். இந்தப் பழக்கமே தமிழ்மக்களின் இனப்பிரச்சனைக்கும் இன்றைய நிலைக்கும் காரணம் என்கிருர் ஆயரவர்கள். எனவே நாம் தொடர்ந்தும் இந்த நிலையில் வாழ்ந்தால் என்ன என்று எண்ணுகிறேம்.

தான் உண்டு, தன் குடும்பம் உண்டு என்று, தான் வாழ வழிகிடைத்தால் போதும் என்ற எண்ணம் மேலோங்கி நிற்பதால், தமிழ் இனம் இன்னமும் சுதந்திரம் பெருமல் இருக்கிறது.

[illegible] இலங்கையில் இனக்[illegible]ம் எழுகின்ற [illegible]பல வடக்கு கிழக்கு[illegible], தமி[illegible] பகுதிகளில் [illegible]மைதி குன்றிய வேளைகளில் தென் இலங்கைக்கும் [illegible]டிபெயர்ந்து தாம் பிழைத்துக் கொள்ள வழிதேடிய வரலாறே தமிழ் மக்களின் கடந்த 40 ஆண்டுகால வாழ்வாகியது.

இங்கும் அங்கும் பிழைத்துக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்படவே, வெளிநாடுகளில் கறுத்த அடிமைகளைப் போல வாழ்ந்தாலும், உழைத்துவிட முடியும் என்ற எண்ணத்துடனும், பாதுகாப்புக் கருதியும் அகதிகளாகச் சென்ருேர் ஏராளம்.

இத்தகைய காலனித்துவ வாழ்வைத் தமிழர் பழகிக்கொண்ட காரணத்திஞலேயே உரிமைப் போராட்டம் சாண் ஏற முழம் சறுக்கும் நிலையில் இன்று உள்ளது.

பூனைக்கு நல்ல பழக்கங்களைக் கற்றுக் கொடுத்த ஒரு எசமான், தனது நண்பன் முன், தனது பூனையின் கெட்டித்தனத்தை எண்பிக்க முயன்ருன். பூனை, தான் பழகிக் கொண்ட வித்தைகளை எல்லாம் செய்து காட்டிக் கொண்டிருந்தவேளை, அவ்வழியே ஒரு எலி ஓடியது. எலியைக்கண்ட பூனை தன் எசமானையும் மறந்து, தான் தலையில் வைத்திருந்த கண்ணுடிப் பாத்திரத்தையும் நிலத்தில் போட்டுவிட்டு எலியைத் துரத்திக் கொண்டு ஓடியதாம். எனவே, ''பழக்கம் பெரிதா, பரவணி பெரிதா? என்பார்கள்.

''ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பது தவரு?'' என்ற கோஷம் எழுப்பப்பட்ட போது காலனித்துவ மரபு தூக்கி எறியப்பட்டது. உரிமைப் போராட்டம் முன் எடுத்துச் செல்லப்பட்டது. இதுவே எமது இளைஞர்கள் சிலரின் அண்மைக்கால வரலாறு. தமிழ் இனம் இரண்டாம் தரப் பிரஜைகளாக வாழும்நிலை மாறவேண்டும் என்ற எண்ணம் உதித்ததன் விளைவே எமது கடந்த கால போராட்டத்தைத் தோற்றுவித்தது.

இன்றைய காலத்தில் விடுதலை உணர்வு மேலோங்கி நிற்கிறது. மீண்டும் சுயநிர்ணய உரிமை பெற்று, உரிமையுள்ள மக்களாகச் சுதந்திர மக்களாக வாழ வழி தேடப்படுகிறது. அடிமைப் பழக்கத்தைக் கைவிட்டு சுதந்திர வாழ்வுக்கு வழி அமைக்கத் தடையான மலைகள் எல்லாம் தகர்க்கப்பட்டு விட்டன. மிகுதியான தடைக்கற்களையும் அகற்றிவிட துணிவுடன் தொடருவோம்.

அழிவந்த செய்யினும் அன்பருர் அன்பின்
வழிவந்த கேண்மையவர்.

# "மீட்பரின் அன்னை"

திருத்தந்தையின் சுற்றுமடல் (23)

## அனைத்தையும் கிறிஸ்துவில் ஒன்று சேர்க்கும்வரை மரியாளின் பரிந்துரைப்பணி

''கிறிஸ்து சாவை ஏற்கும் அளவிற்குக் கீழ்ப்படிந்து அதஞல் தந்தையால் உயர்த்தப் பெற்று (பிலி. 2:8-9) தமது அரசின் மாட்சிமையில் நுழைந்தார். இறைவன் எல்லாவற்றிலும் எல்லாம் ஆகுமாறு (1 கொரி. 15:27-28), கிறிஸ்து தம்மையும் படைப்புக்கள் அனைத்தையும் தந்தையின்கீழ் கொண்டுவரும்வரை, அனைத்தும் கிறிஸ்துவுக்குக் கட்டுப்பட்டே இருக்கும்.'' (திரு. 36). ஆண்டவரின் அடிமையாகிய மரியாளுக்கு திருமகனது அரசிலே பங்கு உண்டு. பணிபுரியும் மகிமையானது அவளது அரச உயர்வாக மட்டும் நின்றுவிடவில்லை, விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதன் காரணமாக தனது மீட்புப் பணியை அவள் விட்டுவிடவில்லை. மாருக, தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் முடிவில்லா நிறைவு பெறும் வரை மரியாளின் தாய்க்குரிய பரிந்துரைப் பணி நீடிக்கிறது. இவ்வுலகில் தனது திருமகனுடன் கொண்டிருந்த ஒன்றிப்பை அவரது சிலுவை வரை பிரமாணிக்கத்துடன்பேணி வந்தாள். இப்போது ''அனைத்தும் அவருக்கு அடிபணிந்திருக்கின்றன, அனைத்துடனும் அவரும் தந்தைக்கு அடிபணியும் வரை'' தொடர்ந்தும் அவள் அவருடன் இணைந்திருக்கின்ருள். இவ்வாறு மரியாள் தனது விண்ணேற்பில் புனிதர்களின் கூட்டுறவு எனும் முழு உண்மையாலும் அணிவிக்கப் பட்டவள்போல இருக்கின்ருள். மகிமையில் வீற்றிருக்கும் தனது திருமகனுடன் அவள் கொண்டிருக்கும் ஒன்றிப்பானது ''கடவுளே அனைத்திலும் அனைத்துமாக இருப்பார்'' என்னும் இறையரசின் திட்டவட்டமான முழுமையை நோக்கியதாக உளது.

இந்தக் கட்டத்திலும் கூட மரியாளின் தாய்க்குரிய பரிந்துரைப்பணியானது ஒரே இணைப்பாளருக்குக் கீழ்ப்பட்ட நிலையிலிருந்து மாறுபடவில்லை. காலத்தின்முழுமையினதுஇறுதிநிறைவாக்கம் வரை அவளின் பரிந்துரைப்பணி நீடிக்கும், அதாவது, ''அனைத்தையும் கிறிஸ்துவில் ஒன்று சேர்க்குமளவும்'' (எபே. 1 : 10).

## 2. திருச்சபையினதும் ஒவ்வொரு கிறிஸ்தவனதும் வாழ்வில் மரியாள்

இரண்டாம் வத். சங்கமானது பாரம்பரியத்துடன் இணைந்து, திருச்சபையின் வாழ்வில் அன்னையின் பணி பற்றி புதிய ஒளியினைத் தந்துள்ளது. ''இறைவனின் தாய் எனும் [illegible] மரியாள் மீட்பரான தன் மகனுடனும் அவரது தனிப்பட்ட அருட்கொடைகளுடனும், அலுவல்களுடனும் இணைக்கப்பட்டிருக்கிருள். இதன் காரணமாக தூய கன்னி திருச்சபையோடும் நெருங்கிய முறையில் இணைக்கப்பட்டிருக்கிருள்...... விசுவாசம், அன்பு, கிறிஸ்துவோடு கொண்டுள்ள நிறை ஒன்றிப்பு ஆகியவற்ருல் இறைஅன்னை திருச்சபையின் மாதிரியாய் விளங்குகிருள்'' (திரு. 63) நாம் ஏற்கனவே கூறியதுபோல் ஆரம்பத்திலிருந்தே மரியாள் அப்போஸ்தலர்களுடன் கூடி தூய ஆவியின் வருகைக்காகக் காத்திருக்கின்ருள். ''விசுவசித்தவள் பேறுபெற்றவளே'' என்பதற்கொப்ப பயணத்திருச்சபையின் மத்தியிலே விசுவாசத்தின் மூலம் வீண்போகாத நம்பிக்கையின் மாதிரியாக, தலைமுறை தலைமுறையாக அவள் பிரசன்னமாக இருந்து வருகின்ருள். (உரோ. 5. 5) ஆண்டவரால் தனக்குக் கூறப்பட்டவை நிறைவேறும் என்று மரியாள் விசுவசித்தாள். [illegible]னியாக இருக்கும்போது தான் ஒரு மகனைக் கருத்தாங்கிப் பெற்றெடுப்பாள் என விசுவசித்தாள். அவரே 'இறைமகன்' எனப் பெயர் பெறும் 'உன்னதர்' 'இயேசு' (=கடவுள் மீட்கின்ருர்) இந்தத் திருமகனின் ஆளுமைக்கும், பணிக்கும் அவள் ஆண்டவரின் அடிமை என்ற மட்டில் முற்று முழுவதும் பிரமாணிக்கமாயிருந்தாள். ''ஏனெனில், கணவனையே அறியாத அவள் தூய ஆவி நிழலிடத் தன் விசுவாசத்தாலும் கீழ்ப்படிதலாலும் தந்தையின் மகனையே உலகில் பெற்றெடுத்தாள்'' (திரு. 63) இக்காரணங்களுக்காகவே ''திருச்சபை மரியாளைத் தனிப்பட்டதொரு வணக்கத்தால் பெருமைப்படுத்துகிறது. தூய கன்னியை ஆதிமுதலே விசுவாசிகள் ''இறைவனின் தாய்'' என்றழைத்து வணங்கினர். தங்கள் துன்பங்கள், தேவைகள் அனைத்திலும் அவளை மன்ருடி, அவ[illegible] பாதுகாவலிலே புகலடைந்[illegible]ருக்கின்றனர்'' (திரு. 66) இந்த வணக்கமானது முற்றிலும் விசேடமானதாகும். [illegible] கிறிஸ்துவின் அன்னைக்கும் திருச்சபைக்குமிடையே நிலவுகின்ற வலுவான உறவை வெளிப்படுத்துகின்றது; அதனைத் தன்னகத்தேயும் கொண்டுளளது. கன்னியாகவும் அன்னையாகவும் இருப்பதன் மூலம் மரியாள் திருச்சபையின் ''நிரந்தரமான மாதிரியாக'' திகழ்கின்ருள் கிறிஸ்து மறைபொருளில் மரியாள் எவ்வாறு ஒரு மாதிரியாக அல்லது வடிவமாக விளங்குகிருளோ அவ்வாறே எப்போதும் திருச்சபை பற்றிய மறைபொருளிலும் பிரசன்னமாக இருக்கின்ருள். ஏனெனில், திருச்சபையும் அன்னையெனவும் கன்னியெனவும் அழைக்கப்படுகிறது. இவ்வாறுன பெயர்கள் வலுவான விவிலிய, இறையியல் ஆதாரங்களை உடையவை.

## மரியாளைப்போன்று திருச்சபையும் ஓர் அன்னை

இறைவனின் வார்த்தையை விசுவாசத்துடன் ஏற்றுக்கொள்வதன்மூலம் திருச்சபையும் ஓர் அன்னை ஆகின்றது'' (திரு. 64) மங்கள வார்த்தையின்போது தனக்கு முதலில் வெளிப்படுத்தப்பட்ட இறைவனது வார்த்தையை ஏற்று விசுவசித்த மரியாளைப் போன்று, அவ்வார்த்தைக்கு சிலுவை வரை எல்லாச் சோதனைகளிலும் பிரமாணிக்கமாயிருந்த மரியாளைப் போன்று, திருச்சபையும் இறைவார்த்தையைப் பிரமாணிக்கத்துடன் ஏற்றுக்கொள்ளும்போது தாயாக மாறுகிறது. ''ஏனெனில், மறையுரையாலும் திருமுழுக்காலும் பிள்ளைகளைப் புதிய அழிவில்லா வாழ்வுக்குப் பெற்றெடுக்கிறது; இப்பிள்ளைகள் தூய ஆவியால் கருவுற்று இறைவனிடமிருந்து பிறந்தவர்கள்'' (திரு. 64) திருச்சபையின் இத்தாய்மைப் பண்பானது புறவினத்தாரின் அப்போஸ்தலரால் குறிப்பிடத்தக்க, துலக்கமான முறையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது: ''என் குழந்தைகளே, குழந்தையைப் பெற்றெடுக்கும் தாய் போல, உங்களில் கிறிஸ்து உருவாகும்வரை, மறுபடியும் உங்களுக்காக நான் வேதனையுறுகிறேன்'' (கலா. 4:19) புனித சின்னப்பரின் இவ்வார்த்தைகள் மனித இனத்திற்கான ஆதித் திருச்சபையினது திருமறைப் பணியுடன் தொடர்புடைய அதனது தாய்மை பற்றிய சிந்தனையை எடுத்தியம்பும் ஓர் ஆய்வுக்குரிய அடையாளத்தை உள்ளடக்கியுள்ளது. இத்தகைய சிந்தனை உணர்வுதான் திருச்சபை, தனது வாழ்வு, பணி பற்றிய மறைபொருளை ''சகோதரர் பலருள் தலைப்பேருன திருமகனது'' (உரோ. 8:29) அன்னையின் முன்மாதிரியைப் பின்பற்றி வாழ உதவியது; இப்போதும் உதவுகிறது.

திருச்சபை மரியாளிடமிருந்துதான் தனது தாய்மையைக் கற்றுக்கொள்கிறது எனக் கூறலாம். ''மரியாளிடம் மறைந்து நிற்கும் புனிதத்துவத்தைத் திருச்சபை தியானிக்கிறது; அவளது அன்பைக் கண்டு பாவிக்கிறது; தந்தையின் திருவுளத்தைப் பிரமாணிக்கமாய்நிறைவேற்றுகிறது'' (திரு. 64).

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# மரியாள் - இறைமகனின் அன்னை

கத்தோலிக்க திருச்சபையின் விசுவாச வாழ்விலும் அதன் இறையியல் சிந்தனைகளிலும் தனியான இடம் வகிப்பவள் அன்னை மரியாள். ஏனெனில் அவள் இவ்வுலகில் மனிதனாய் உடலெடுத்த இறைமகனாம் கிறிஸ்துவிற்கு அன்னை. இறை வட்டத்திலிருந்து மனிதவட்டத்திற்குள் நுழைந்த இறைமகன் கிறிஸ்துவைத் தனது வயிற்றில் கருவாகத் தாங்கி, அவருக்கு மனித உருவம் கொடுத்து இவ்வுலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவள். இது இறைவன் அவளுக்குக் கொடுத்த சலுகை அல்ல, மாறாக இறைவன் அவளுக்கு அளித்த மாபெரும் அழைப்பு அல்லது அருங்கொடை ஆகும். ஆம், இறைவன் தமது மீட்புத் திட்டத்தில் மரியாளை இறைமகனின் அன்னையாக முன் குறித்து வைத்தார். காலம் நிறைவுற்றபோது தமது மேலான திட்டத்தைக் கபிரியேல் வானதூதர் மூலமாக

என அழைக்கப்படுகிறாள். இது திருச்சபை மரபில் மிகவும் தாராளமாகப் பயன்படுத்தப் பட்டது. எவ்வாறெனில், உயிர்ப்பின் ஒளியில் இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்ட ஆதித் திருச்சபையின் விசுவாசத்தில் ஒரு வளர்ச்சி ஏற்படுகிறது. அதாவது, இயேசு தமது உயிர்ப்பில் மட்டுமல்ல, தமது பிறப்பின் முதல் கணத்திலிருந்தே ஆண்டவர் என்ற உண்மை உணரப்படுகின்றது. நற்செய்தியாளர் அருளப்பர் இன்னுமொருபடி மேலே சென்று 'ஆதியிலேயே வார்த்தை இருந்தார்' என்று கூறுகிறார், இவ்வாறான கிறிஸ்துமையக் கண்ணோட்டத்தில் தான் மரியாளின் தெய்வீகத் தாய்மையையும் நாம் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. ஆதித் திருச்சபையில் திருத்தந்தையர், மரியாள் இறைவனின் தாய் எனும் உண்மையை அதிகம் வலியுறுத்தி வந்தனர். ''யாராவது

அன்னையாகிய பரிசுத்த கன்னி மரியாள்' என்னும் பெருவிழாவாகக் கொண்டாடி மகிழ்கின்றது. மரியாள் இறைவனின் தாய் எனத் திருச்சங்கம் வலியுறுத்தினால் மட்டும் போதாது, அதனை நாம் ஒவ்வொருவரும் நமது அன்றாட விசுவாச வாழ்வோடு தொடர்புபடுத்திச் சிந்திக்க வேண்டும். இல்லாவிடில் இந்த உண்மையானது வெறும் பரிசுத்தமான சிந்தனையாக மட்டும் நம் நெஞ்சங்களில் தேங்கிவிடலாம்.

முடிவுரை:

ஒரு பெண்ணானவள் இந்த உலகில் அடையக்கூடிய பெரும்பேறு தாய்மைப் பேறாகும். தாய்மை என்பது ஒரு பெண்ணுக்கும் அவள் ஈன்றெடுக்கும் குழந்தைக்குமுள்ள உறவை எடுத்துரைக்கிறது. தாய்மையானது வெறும் உடலளவில் மட்டும் ஒரு பெண்ணைப் பாதிப்பதில்லை. உளரீதியிலும் அவளைப் பாதிக்கிறது. ஏனெனில் அவள் கருத்தாங்கிப் பெற்றெடுப்பது ஒரு மனிதப் பிறவியையே. அதன் சுதந்திரத்தை அவள் மதிக்கவேண்டும், அதனது தனிப்பட்ட அழைப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதனது முழுமையான வளர்ச்சிக்குத் தனது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். எனவே ஒரு பெண்ணின் தாய்மைப்பேறு என்பது மிகவும் பொறுப்பு வாய்ந்த ஒன்று, அது அக்கறையோடு வாழப்படவேண்டிய மெய்யான விஷயம், தனது பிள்ளையின் நலனில், அக்கறை கொண்டு, அதன் வளர்ச்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தித் தன்னை முழுமையாக அர்ப்பணிப்பதில்தான் பெண்ணானவள் தனது தாய்மையின் முழுநிறைவை அடைகிறாள்.

இத்தகைய தாய்மையின் முழுமைக்கு சிறந்த எடுத்துக் காட்டு அன்னை மரியாள். பரிசுத்த ஆவியின் வல்லமையினால் தாய்மைப் பேற்றினை அடைந்த மரியாள் தனது மகனின் வாழ்வோடு தன்னை முற்றிலும் இணைத்துக் கொண்டாள. தனது தாய்மையின் முழுமையை நோக்கிப் படிப்படியாக முன்னேறினாள். இறைவனின் திட்டங்களை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாத சந்தர்ப்பங்கள் ஏற்பட்ட போது அவற்றையெல்லாம் மனதில் வைத்துப் புரட்டினாள். தனது விருப்பு வெறுப்புக்களை எல்லாம் ஒருபுறம் ஒதுக்கிமகனின் மீட்பு அலுவலில் தன்னையும் இணைத்துக் கொள்கிறாள். கிறிஸ்துவின் பிறப்பில் தொடங்கிய அவளது தாய்மை அவரது துயரமான சிலுவைமரணம் வரை இடையூறின்றித் தொடர்ந்து, மீட்பின் கருவியாகத் தன்னை வெளிப்படுத்துகிறது. அன்னையின் தாய்மை வெளிப்படுத்தும் இவ்வுண்மைகள் அவள்பால் நம் அன்பையும் வணக்கத்தையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும். அவளது தாய்மைக்குரிய பரிந்துரையின் மூலமாக இறைவனின் திருவுளத்தை எப்போதும் நாடவும், அதற்கு நம்மை முழுமையாகக் கையளிக்கவும் தூண்டவேண்டும்.

## மரியாளின் ஆண்டு சிறப்புக் கட்டுரை (2)

அவளுக்கு வெளிப்படுத்ினார். அதற்கேற்ப இறைவன் அவளுக்குக் கொடுத்தது தான் தாய்மைக் கொடை. இதுவே அவளைப்பற்றி நாம் அறிவதற்கு முதற்படி, இதற்கு உறுதுணையாகவே இறைவன் அவளுக்கு அமல உற்பவம், கன்னிமை எனும் கொடைகளைத் தந்தார்.

மரியாளின் தாய்மை எனும் மறைபொருள்:

மரியாளைப் பற்றிய திருச்சபையின் போதனை கிறிஸ்து இயலோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையது. கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றியும் அவரது வாழ்வு, பணி பற்றியும் விளக்கம் கொடுக்க வரும் போதுதான் மரியாளைப் பற்றியும் நிறைய அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. ஏனெனில் இறைமகன் கிறிஸ்துவின் மனித அவதாரத்திலே தான் அவளின் தாய்மைப்பேறு நமக்குப் பளிச்சென வெளிப்படுகிறது நற்செய்தியைப் புரட்டும்போது கபிரியேல் வானதூதரின் மங்கள வார்த்தை மரியாளின் தாய்மைப் பேற்றினை ஆரம்பித்து வைக்கிறது. தன் கணவனையே அறியாதிருந்த மரியாள் ''பரிசுத்த ஆவி உம்மீது வருவார். உன்னதரின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலின் பிறக்கும் திருக்குழந்தை கடவுளுடைய மகன் எனப்படும்.'' எனும் வானதூதரின் வார்த்தைகளுக்கு 'ஆகட்டும்' என்று தனது ஒப்புதலை அளித்துத் தாய்மைப் பேற்றினை அடைகிறாள். இதன் காரணமாகவே அவள் நற்செய்திகளில் 'இயேசுவின்தாய்' என அழைக்கப்படுகிறாள், ஆனால் மரியாள் 'இறைவனின் தாய்' என நேரிடையான குறிப்பேதும் நற்செய்திகளில் இல்லை.

திருச்சபை மரபில் தான் மரியாள் 'இறைவனின் தாய்'

மரியாள் இறைவனின் தாய் என்பதை மறுத்துரைப்பானாகில் அவன் இறை விசுவாசத்திற்குப் புறம்பானவன்'' என்று அறிவித்தனர். ஆயினும் விவிலியத்தில் தெளிவான விதத்தில் இந்த உண்மை எடுத்துரைக்கப்படாததால் திருச்சபை மரபில் இது தொடர்பான வாதப்பிரதிவாதங்களும் தலைதூக்கத்தான் செய்தன. சாதாரண மனிதப் பிறவியான மரியாள் எப்படி இறைவனுக்குத் தாயாக முடியும் என்ற கேள்விகள் எழுந்தன.

அருள்திரு
யோ. கமிலஸ் நிமலன்
புனித பிரான்சிஸ் சவேரியார்
குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை.

முக்கியமாக கி. பி. 5ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கொன்ஸ்தாந்திநோபிள் நகரின் பேராயராயிருந்த நெஸ்தோரியுஸ் என்பவர் மரியாள் இறைவனின் தாய் எனும் உண்மையை மறுத்தார் இறைவனின் தாய் எனும் பதத்தை மரியாளுக்குச் சூட்டுவதைக் கடுமையாக எதிர்த்தார். ''மரியாளை நாம் இறைவனின் அன்னை என்று அழைத்தலாகாது. ஏனெனில் அவள் ஒரு மனிதப்பிறவி. இறைவன் தாமே படைத்த ஒரு பெண்ணிடம் எவ்வாறு பிறக்க முடியும்'' என்றார். இக்கருத்து விசுவாசிகள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இச்சந்தர்ப்பத்தில் தான் எபேசு திருச்சங்கம் கி. பி. 431இல் மரியாள் இறைவனின் தாய் எனப் பிரகடனப்படுத்தியது. மரியாள் பற்றிய இந்த மாபெரும் அடிப்படை உண்மையைத்தான் திருச்சபை ஆண்டுதோறும் தை மாதம் 1ஆம் திகதி 'இறைவனின்

# உறுதிப்பூசுதல் பெற்றபின் நான் ஒரு கிறிஸ்தவ போர்வீரன்

பள்ளிமுனைப் பங்கிலே உறுதிப்பூசுதல் பெற இருந்த மாணவர்களுக்கு பங்குத்தந்தையின் தலைமையில் அருட்சகோதரிகளாலும் மறையாசிரியர்களாலும் தை மாதம் தொடக்கம் வைகாசி மாதம் 7-ந் திகதிவரை ஆயத்தவகுப்புகள் நடைபெற்றன. இதில் மாணவர்களுக்கு அறிவும் ஊக்கமும் கொடுக்கும் வகையில் வினாவிடைப்போட்டிகளும் நாடகப்போட்டிகளும் நடைபெற்றன.

அத்தோடு கட்டுரைப் போட்டிகளும் நடத்தப்பட்டு சிறந்த கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டன. அவற்றுள் முதலாவதாகத்தெரிவு செய்யப்பட்டது. செல்வன் யா. லோறன்ஸ் என்பவர் எழுதிய கட்டுரையாகும். அதனை இங்கு பிரசுரிக்கிறோம்.

இந்தப் போட்டியில் 75 இற்குக் கூடிய புள்ளிகளை எடுத்தவர்களின் பெயர்கள்

| | |
|---|---|
| செல்வி. ஜி. மேரி இமெல்டா | 88 |
| செல்வி. சூ. அன்ரனிற்று | 77 |
| செல்வன். ஜெ. அன்ரன் மறிஜினஸ் | 77 |

இயேசு தூய ஆவியை, வாக்களித்தபடி அவர் உயிர்த்த ஐம்பதாம் நாளிலே ஒவ்வொரு அப்போஸ்தலனும் ஒவ்வொரு ஞானப் போர் வீரனாக ஆகும்படி. செயற்படும்படி பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்கள் மேல் அனுப்பினார். இறை ஆவியை அப்போஸ்தலர் பெற்றபின் திடத்தையும், உறுதியையும், வீரத்தையும், விசுவாசத்தையும் நிறைவாகப் பெற்றுக்கொண்டார்கள்.

அப்போஸ்தலர்களும் மரியாளும் அவர்களோடு சில பெண்களும் கூடி இறைவன்பால் மனங்களை ஒருமித்துச் செபித்துக்கொண்டிருந்த வேளையிலே திடீரென்று பெருங்காற்று வீசுவதுபோன்ற இரைச்சல் வானில் உண்டாயிற்று. அவர்கள் இருந்த வீட்டிலே நெருப்பு போன்ற நாவுகள் அவர்களுக்குத் தோன்றி அவர்கள் ஒவ்வொருவரின் மேலும் வந்து தங்கின. எல்லோரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு; ஆவியானவர் அருளியபடிஅயல், மொழிகளில் பேசத்தொடங்சினர். மக்களுளுக்கு அஞ்சி, நடுங்கி, ஒதுங்கி இருந்த அப்போஸ்தலர் துணிவோடு ''நீங்கள் சென்று உலகின் கடைசி எல்லைவரை போதியுங்கள்'' என்ற யேசுவின் வாக்குக்கேற்ப ஜெருசலேம் தொடங்கி உலகின் கடைசி எல்லையான உரோமைவரை அஞ்சா நெஞ்சுடனும் யேசுவின் நற்செய்தியைப் போதிக்கத் தொடங்கினர். பரிசுத்த ஆவியின் துணையால் உறுதி பெற்ற சீடர் தம் கடைசி உயிர் இருக்கும்வரை கிறிஸ்துவின் போர் வீரராகவே வாழ்ந்தனர். உதாரணமாக யூத மக்கள் பெருந்திரளாக விழா எடுப்பதற்காக பல இடங்களில் இருந்தும் ஜெருசலேமுக்கு வந்து இருந்தார்கள். பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட அப்போஸ்தலர்கள் பல மொழிகளில் பேசுவதை தத்தம் மொழிகளில் மக்கள் கேட்டுத் திடுக்கிட்டார்கள். பரிசுத்த ஆவியால் உறுதிபெற்றுக்கொண்ட இராயப்பர் எழுந்து நின்று மக்களுக்குப் போதிக்கத் தொடங்கினார். இயேசுவின் உயிர்ப்புக்குச் சாட்சியம் கூறினார். அன்றைய தினத்திலேயே ஏறக்குறைய மூவாயிரம் பேர்வரை மனந்திரும்பி திருமுழுக்குப் பெற்றுக் கொண்டார்கள்.

எம்மத்தியிலும் யேசு உயிர்த்துவிட்டார் எனவே உறுதிப்பூசுதல் பெற்ற பின்பு நானும் போர் வீரனாக இராயப்பரைப் போன்று பல்வேறு [illegible]கோதரங்கள் மத்தி[illegible] [illegible]துவுக்குச் சான்று [illegible]ரவேண்டும் யேசுவின் நற்செய்தியைப் பிறருக்கு அறிவிக்கவேண்டும். மீட்பு யூதர்களுக்கு மட்டுமல்ல மனுக்குலம் முழுவதற்கும் உரியதொன்றாகும். எனவே உறுதிபூசுதல் பெற்ற நான் அந்த மீட்பைப் பிறருக்கு அறிவிக்கவேண்டும். அதிலே தான் நான் ஒரு அப்போஸ்தலனாக கிறிஸ்தவ போர் வீரனாகச் செயலாற்றுகிறேன்.

உயிர்த்த யேசுவை அப்போஸ்தலர் கண்ட பின்பும் அச்சம் அவர்களை விட்டு நீங்கவில்லை. உயிர்த்த யேசு நாற்பது நாள் அவர்களோடு இருந்தார். அதன்பின்புதான் விண்ணகம் சென்றார். இருந்தும் அப்போஸ்தலர்கள் அஞ்சி நடுங்கியே வாழ்ந்தனர். ஆனால் யேசு விண்ணகம் சென்று பத்தாம் நாளிலே தூய ஆவி வந்தபின்பே அவர்கள் ஒவ்வொருவரும் துணிவுடன் சமாரியாவின் செபக்கூடங்களில் மட்டுமல்லாமல் இறையரசை வீடுவீடாக, நாடு நாடாக, அரசுக்கு அரசாக அறிவித்தனர். இவ்வாறு அறிவிக்கையிலே அவர்கள் இரும்புக் கட்டிலில் வைத்து எரிக்கப்பட்டனர். தலைகள் துண்டிக்கப்பட்டனர். சிங்கம், புலி போன்ற கொடிய மிருகங்களுக்கு இரையாகப் போடப்பட்டனர். தலைகீழாக ஆணியில் அறையப்பட்டனர். நெருப்புச்சூளையிலே எறியப்பட்டனர். உயிர் துறந்தனர். எவ்வாறு அஞ்சி நடுங்கி வாழ்ந்தனரோ அதற்கு மேலாகக் கிறிஸ்துவுக்காக தமது உயி

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# சுமையான வாழ்வு சுகமானது

## சிறுகதை

அருளானந்தம் ஓர் அரசாங்க வங்கியில் கடமைபுரியும் அரசாங்க உத்தியோகத்தர். உடம்பில் பாதி திமிர். ஆடம்பர வாழ்க்கையில் நாட்டம் கொண்ட மனைவியும், 18வயது தொடக்கம் 14 வயதுவரை வளர்ந்து நிற்கும் பருவப் பெண்கள் மூவருமாக மொத்தம் ஐந்து பேரைக் கொண்டு மத்தியதர வர்க்கத்தில் அருளானந்தத்தின் குடும்பம் ஓடிக்கொண்டிருந்தது. மூத்த மகள் ரோசி பல்கலைக்கழகத்தில் B.A. கற்கும் மாணவி. நீற்று A/L படிக்கும் பாடசாலை மாணவி. கடைக்குட்டி துளசி 9ம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறாள். தோளுக்கு மிஞ்சி வளர்ந்துவிட்ட பிள்ளைகளையும் ஆடம்பர வாழ்க்கையில் நாட்டம்கொண்ட மனைவியையும் சேர்த்துத்தன் மாதவருமானத்தில் குடும்பம் நடத்தமுடியாமல் திண்டாடும் நிலையில் ஏதோ ஒவ்வொரு மாதமும் மாதத்தின் இறுதி வாரத்தைக் கடன்பட்டே கழிக்கவேண்டியிருந்தது. வாழ்க்கைப் பாரம் முழுவதையும் தனியாகச் சுமக்க முடியாமல் தவிக்கும் வேளையில் ஒரு நாள் கிடைத்த அதிர்ச்சியான செய்தி அருளானந்தத்தை மேலும் நிலைகுலையச் செய்தது.

அவனது மூத்தமகள் ரோசி பல்கலைக்கழகத்தில் ஓர் பணக்காரப் பையனைக் காதலிக்கின்றாள். இவளின் அழகும் துடுக்கான பே[illegible]ம் வசந்தனை இவள் [illegible]செய்துவிட்டது. வசந்தன் பணக்கார வீட்டுப் பையன். இவனுக்கும் ரோசிக்கும் படிப்பில் மட்டும் ஒற்றுமை தவிர ஏனைய விடயங்களில் திருமணத்திற்கு இருவருக்கும் பொருத்தம் இல்லாதவர்கள். பணத்தால், சாதியால் ரோசி குறைந்தவள். "காதலுக்குக் கண் இல்லை" என்பார்கள் அதேபோல் ரோசியின் கண்களையும் அவளது காதல் மறைத்துவிட்டது. ரோசியும் வசந்தனும் மனம் ஒத்த காதலர்களாகப் பல்கலைக்கழகத்தில் பவனிவரும் சிட்டுக் குருவிகளாயினர். நாட்கள் பல ஓடின. இவ்விடயம் வசந்தனின் பெற்றோரின் காதுகளுக்கும் எட்டிவிட்டது. இதுபற்றி வசந்தனிடம் அவனது பெற்றோர் கேட்டபோது உண்மையை ஒத்துக்கொண்டான் தான் ரோசி என்ற பெண்ணைக் காதலிப்பதாகவும் படிப்பு முடிந்ததும் அவளையே திருமணம் செய்துகொள்ளப்போவதாகவும் பெற்றோரிடம் விவாதம் செய்தான். ஆனால் வசந்தனின் பணக்காரச் சமூகம் ஏழைப் பெண்ணை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. வர்க்கம் தன் வர்க்கத்தையே நாடும் அல்லவா? வசந்தனின் பெற்றோரும் அவ்வழியில்தான் சென்றனர். தந்தையின் அதிகாரத்தாலும் தாயின் பிடிவாதத்தாலும் வசந்தன் தன் உண்மைக் காதலைத் தியாகம் செய்யும் நிலைக்கு உள்ளானான். ஏனெனில் சற்றேனும் தாமதித்தால் வசந்தன் ரோசியை இரகசியத் திருமணம் செய்துவிடுவானோ என்று பயந்து அவனின் பெற்றோர் தங்கள் பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்த இடத்தில் நிறையச் சீதனத்துடன் வசந்தனுக்குத் திடீரெனத் திருமணம் நடத்திமுடித்தனர். இவ் அதிர்ச்சியான செய்தி ரோசியின் காதுகளுக்கெட்டியதும் பேரதிர்ச்சிக்கு உட்பட்டு அவள் நிலை தடுமாறலானாள். அதிர்ச்சியின் வலையில் சிக்கிய ரோசி பைத்தியக்காரி என்ற பட்டத்தைச் சுமக்கும் நிலைக்குட்பட்டாள். வெளியில் நடமாடவிட முடியாத சூழ்நிலை உருவானது. நான்கு சுவருக்குள் சிறை வைக்கவேண்டிய நிலைக்கு அவள் தள்ளப்பட்டாள். வீடே ரோசிக்குச் சிறையாகியது.

வாழ்க்கையின் சுமையால் ஏற்கெனவே வேதனைப்பட்ட அருளானந்தத்திற்கு மகளின் பைத்திய நிலை மேலும் வாழ்க்கைச் செலவில் துண்டுவிழச் செய்தது. இவரின் மனைவியோ ரோசிக்கு வசந்தனின் பெற்றோர் செய்வினை செய்துவிட்டனர் என்று எண்ணி பேய், பிசாசு, பில்லி சூனியம் என்று அண்ணாவியையும் குறிசொல்பவரையும் தேடிப் பணத்தை விரையப்படுத்தினாள். அருளானந்தமோ டாக்டரிடம் வைத்தியத்துக்காகப் பணத்தைச் செலவுபண்ணினார். மொத்தத்தில் பலன் ஏதும் கிட்டவில்லை. ஏற்கனவே வறுமைவட்டத்திற்குள் தள்ளப்பட்ட குடும்பம் பைத்தியக்காரியின் வைத்தியச் செலவினால் மேலும் மேலும் வறுமைக்கு இட்டுச் செல்லப்பட்டது. அருளானந்தம் குடும்பப் பாரத்தை எப்படிச் சுமந்து முடிப்பது என்று தவித்துக்கொண்டு தனது மனைவி மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியுடனே காணப்படுகின்றதே எனக் கவலைப்பட்டார்.

அருளானந்தம் தனது கடமை நேரம்போக மிகுதி சில மணி நேரங்களும் மன அமைதிக்காக அலுவலகத்திலேயே செலவழித்தார். வேலை முடிந்து வீடு திரும்பும்போது மனதில் பலவித வேதனைக்களைகளுடன்தான் திரும்புவது வழக்கமாயிற்று. இவ்வாறு வழமைப்படி அன்றும் வீடு திரும்புகையில் தனது வீட்டை நோக்கிச் சிலர் வந்தனர். அவர்கள் முதலில் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டனர். "நாங்கள் மரியாயின் சேனை உறுப்பினர். மாதாவின் பக்தியைப் பரப்புவதும் ஊழியம் செய்வதும் எங்களது கடமையாகும்" என்றனர். அங்கு வந்தவர்கள் ஒரு சில மணி நேரம் பேசி அவர்களின் குடும்ப நிலைபற்றிக் கேட்டறிந்து அவர்களின் மனக் கவலைகளைப் பகிர்ந்துகொண்டனர். ஈற்றில் குடும்ப செபமாலை சொல்லிவிட்டு அருளானந்தத்தின் மனைவியை மரியாயின் சேனை உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டு விடைபெற்றனர். மரியாயின் சேனையில் சேர்ந்து ஒவ்வொரு வாரமும் நடைபெறும் கூட்டத்திற்கும் ஊழியத்துக்கும் தவறாது சென்றுவந்தாள். அதன்மூலம் அருளானந்தத்தின் குடும்பத்தினர் தங்கள் வாழ்க்கையை மாதாவிற்கு அர்ப்பணித்தனர். அதனால் பல நிறைவுகளைச் சந்திக்கமுடிந்தது. பாலைவனமாக வரண்டு கிடந்த அருளானந்தத்தின் வாழ்க்கை சோலையாக மாறத் தொடங்கியது. அருளானந்தத்திற்கு வேலையில் பதவி உயர்வு கிடைத்தது. அதனால் கிடைத்த அதிகப்படியான சம்பளம் அவரின் வாழ்க்கைச் செலவிற்குப் பெரிதும் துணைபுரிந்தது. தன்னை மதிக்காமல் ஆடம்பர வாழ்க்கையில் நாட்டம்கொண்டு தான்தோன்றித்தனமாக நடந்த மனைவியும் கணவரின் வருமானத்திற்கு தக்கபடி செலவு செய்யும் பழக்கத்திற்கு உட்பட்டாள். கணவரின் இன்பதுன்பங்களில் பங்கெடுக்கும் நல்ல மனைவியாக மாறினாள். இதனால் குடும்பத்தில் ஓரளவு அமைதியும் நிம்மதியும் கிடைத்தது. ஆனாலும் அவர்களுக்கு ரோசியின் கவலை மனதை வாட்டியது. இருந்தும் விடாமுயற்சியுடன் பக்தியாக மாதாவிற்கு ஊழியம் செய்வதுடன் மகளுக்காகத் தினமும் செபித்து வந்தார்கள். மரியன்னை இவர்களின் மன்றாட்டை ஏற்றுக்கொண்டாள். மரியாயின் சேனை உறுப்பினர் தேவநேசன் என்பவரின் அறிமுகம் அருளானந்தருக்குக்கிடைத்தது. தேவநேசனால் சிறந்த மனோதத்துவ டாக்டரின் உதவி அருளானந்தம் குடும்பத்திற்குக் கிடைத்தது. டாக்டர் ரோசியை நல்ல முறையில் குணப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார் இப்போது ரோசி மற்றப் பெண்களைப்போல் வெளியில் நடமாடக்கூடிய நிலைக்கு வந்துவிட்டாள். அருளானந்தத்தின் சுமையான வாழ்க்கை இப்போது பூத்துக்குலுங்கும் பூங்காவனமாகக் காட்சியளிக்கின்றது.

A. மக்டலின் கூஞ்ஞ
தலைமன்னார் மேற்கு

---

## சந்தா

பாதுகாவலன் பத்திரிகையைத் தபால் மூலம் பெற்றுக்கொள்ள ஒரு ஆண்டுக்கான சந்தா ரூபா 75/- மட்டுமே. ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு ஆண்டுசந்தா £15. அமெரிக்கா கனடாவுக்கு ஒரு ஆண்டு சந்தா 30 U.S.$. பாதுகாவலன், அஞ்சல் பெட்டி 2 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நீங்கள் பணத்தை அனுப்பினால் வாரம்தவறாது பத்திரிகை உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

# தேனருவி

ஆண்டின் 17ஆம் ஞாயிறு (24—07—88)

## மனநிறைவு வேண்டுமே!

"உங்கள் வறுமை எங்களுடைய (கீழைத் தேச) மக்களுடையதிலும் மோசமானது. உங்கள் ஆன்மீக பசியானது எமது மக்களின் வயிற்றுப் பசியிலும் கொடுமையாய் உள்ளது. மேலைத் தேசங்களில் இலட்சக் கணக்கானோர் தனிமை, வெறுமை, விரக்தியினால் மடிந்து கொண்டிருக்கிறார்கள். காரணம், இவர்கள் இறைவனோடும், அயலவரோடும் கொள்ள வேண்டிய தொடர்பைத் துண்டித்தமையே"

என்று அன்னை திரேசாள் மேலைத்தேசநாட்டு மக்களைப் பார்த்துத் தொடுக்கின்றார் சவால் ஒன்றை. இந்த வார்த்தைகள் எம் சமூகத்தில் உள்ள பல மக்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையலாம.

பணம் நிறைய உண்டு, ஆனால் அமைதி குலைந்துபோய் வயிறு நிறைந்து விட்டது.

ஆனால் உள்ளம் நிறையவில்லை. இப்படியெல்லாம் முறையிடுகிறார்கள் பலர். அதனால் வறியவர் நிறைவுடன் வாழ்கிறார்கள் என்பதுமில்லை. உண்மையில் நிறைவும் திருப்தியும் எங்கிருந்து வருகிறது என்பதைப் பலர் இன்னும் அறியாதிருக்கிறார்கள். அதனால் அவர்கள் அதிருப்தியின் எல்லைக் கோட்டில் நிற்கிறார்கள்.

எலிசேயு என்ற இறைமனிதனிடம் 'முதற்கனி ஆண்டவருக்கு' என்ற கோட்பாட்டிற்கு அமைய யாரோ ஒருவர் புதுத் தானியம் ஒரு சாக்கும் அதில் செய்யப்பட்ட சில அப்பங்களையும் அர்ப்பணமாகக் கொண்டு வருகிறார்கள். அவரோ தமது சீடர்கள் ஏறக்குறைய நூறுபேருக்கு அவற்றைப் பகிர்ந்து அளிக்கக் கட்டளையிடுகிறார் அந்த இறைவாக்கினர். நூறுபேருக்குச் சாதாரணமாகப் போதாத உணவு இறைமனிதனின் சீடர்களுக்குப் போதுமாய் அமைந்தது மட்டுமல்ல, மீதியும் இருந்தது.

இதற்குக் காரணம் பாலைவனத்தில் மன்னாவை வழங்கிய உயிருள்ள இறைவனை அவர்கள் பின் தொடர்ந்தமையே.

இன்னுமொரு நாள், பெருங் கூட்டமொன்று இயேசுவை அண்டி வந்த போது, இயேசு அவர்கள் அனைவருக்கும் உணவளிக்க விரும்புகிறார். ஐந்து வாற் கோதுமை அப்பமும், இரண்டு மீனும் ஐயாயிரத்திற்கு அதிகமானோருக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டு, மிகுதியும் தாராளமாய்ச் சேர்க்கப்பட்டது. இந்த நிறைவுக்குக் காரணம், இறைமகன் இயேசுவை அம் மக்கள் பின்தொடர்ந்தமையே.

உண்பதும், உடுப்பதும், உறங்குவதும் முக்கியமல்ல, உள்ளம் இவற்றினூடாகவும் திருப்தி அடைய வேண்டும் என்பதே அதிலும் முக்கியமானது

ஆகவே நன்மைத் தனங்களுக்கு ஊற்றான தெய்வத்தை முதலில் பின் தொடர வேண்டும். செல்வங்கள் அனைத்தும் ஆண்டவருக்கே. சொந்தம்; அவரது தாராள சிந்தையில் இருந்துதான் நாம் பெற்றுக் கொள்ளுகிறோம்; என்ற மனநிலை பொருட்களில் நாம் வைக்கும் அளவுகடந்த ஆசையை அகற்றுகிறது.

செல்வத்தைத் தேடும் போதும் 'இறைவன்' என்ற மனச்சாட்சி உணர்வுடன் உழைத்துச் சேர்க்கவேண்டும். அப்போதுதான் கலப்படம், அநியாயவட்டி, ஏமாற்றம், மோசடி, திருட்டு போன்ற தீமைகளின் விளைவாக நாம் பணம் திரட்டவில்லை என்ற நிறைவு உள்ளத்தில் வளரும்.

அன்றாட உணவை அருளும் ஆண்டவர் எம் எல்லோருக்கும் தந்தை. இதை உணரும் போதுதான், இல்லாதோரோடும் செல்வங்களைப் பகிரவும், சகோதரத்துவத்திற்கு வித்திடவும் நாம் முன்வந்து அதனால் வரும் நிறைவைச் சுவைக்கவும் முடியும்.

பணமும், சொத்தும்தான் எமக்கு அமைதிதரும் என்று வாழும் போது இறைவனின் இடத்தில் பணத்தை வைத்து வழிபடும் சிலைவழிபாட்டுக்காரர்களாக மாறிவிடுகிறோம்.

மாறாக நன்றி உணர்வுடன் அவற்றைப் பயன்படுத்திப், பகிரும் போது அந்த மனநிலையில் எழும் மகிழ்ச்சியும், நிறைவும் எம் தேவைக்கு மேலாகிறது.

எலிசேயுவின் நூறு சீடர் கொண்ட மகிழ்ச்சியும், இயேசுவின் ஐயாயிரத்திற்கு அதிகமான மக்கள் கொண்ட மனநிறைவும் எம் வாழ்விலும் கிடைக்கும்.

சுவாமி. ஜீவா போல். அ.ம.தி.

---

2 அரசர். 4: 42-44 இவர்கள் உண்டபின்னும் மிகுதியிருக்கும்.
எபேசி. 4: 1-6 எல்லோருக்கும் கடவுளும் தந்தையும் ஒருவரே.
அரு. 6: 1-15 அவர்கள் வேண்டிய மட்டும் வாங்கி உண்டார்கள்.

# அமைதியே அகலாதே! வா!

நிம்மதி தேடி ஓடுகின்றோம் நாம். வார்த்தைகளை வரிசைப் படுத்தி வழங்கலாம். எண்ணங் களை எழுத்துருவில்வடிக்கலாம். ஆனால் மன அமைதி என்பது எம் உள்ளங்களில் உருவாக வேண்டும். இன்று மனித உள் ளங்கள் அமைதிக்காக ஏங்கித் தவிக்கின்றன. வாழ்க்கை வசதி கள் அதிகரித்த போதும் மன தில் நிம்மதியின்றி அங்கலாய்க் கின்றான் இன்றைய மனிதன்.

உறவுகளில் விரிசல் ஏற்படுவ தால் உள்ளத்தில் போராட்டம் அன்பு செய்தவர்கள், அன்பு செய்யப்பட்டவர்களிடையே ஏற்படும் மனமுறிவுகள், நினைத் ததைப் பெற முடியவில்லையே என்ற தவிப்புக்கள், இவை யெல்லாம் உள்ளத்தை உறுத் துகின்றன. ஓயாது தொல்லை கொடுக்கின்றன. அமைதிப் புறா எம் உள்ளங்களில் தங்க வேண் டும். அதற்கு எம் உள்ளங் களில் இல்லம் அமைக்க வேண் டும். வாழ்க்கையின் உண்மை இயல்பை அறிந்து கொள் வோம். ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல இன்பமும், துன்பமும் நிறைந்ததுதான் மனித வாழ்வு. எவருமே இன் பத்தில் மட்டும் திளைத்தவர் கள் இல்லை. துன்பத்தில் மட் டும் துவண்டவர்களும் அல்ல. எனவே நாம் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள் மத் தியிலும் எம் மனதில் நாம அமைதியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு நாம் ஒவ்வொருவரும் தான் பொறுப்பானவர்கள்.

"எவ்வழி நல்வழி அவ்வழி நம்வழி" என்பது தமிழ் வாண ணின் வாழ்க்கைத்தத்துவம். "ஆசையை அடக்கு சாந்தி பெறுவாய். அகந்தையை வெற்றிகொள். சீவகாருண்யம் போற்று" என்றார் புத்தர் பிரான். பேராசை, பேராசை, பாராசை இவற்றினால் பூமி நெருப்புக்களமாகி நிற்கின்றது. அமைதிப் புறாக்கள் அண்ட இடம் அகிலமெல்லாம் அலைந்து பறக்கின்றது.

இளைய சுடர்களே! பற்றி எரியுங்கள். மனம் என்னும் விளக்கினிலே அமைதி எண் ணெயை நிரப்பிக் கொள்ளுங் கள். அந்தச் சுடரின் ஒளியிலே நம் சமுகத்தின் பாதையைச் சீராக்குவோம். காற்று பலமாக அடிக்கின்றதே! அமைதிச் சுடர் அணையப் பார்க்கிறதோ? அணைய விடாதீர் அமைதியை அகல விடாதீர். உள்ளப் போராட்டத்தின் மத்தியிலும் உறுதி தளராதீர்.

அமைப்போம்

அமைதிக் கார் பாலம் - அதில்

சமைப்போம் புதிய இளைஞர் உலகம்.

தமிழ் நேசன்
புனித மாட்டீனார் குருமடம்
யாழ்ப்பாணம்.

## புன்னகை

புன்னகை என்பது
புனிதமானது—அதைப்
பயன்படுத்துவோர்
பலர் புனிதமற்றவர்.
பெண்மைச்சோர்
புன்னகை—அது
பொறுமையைச் சித்தரிப்பது.
ஆணுக்கோர் புன்னகை—இது
வீரத்தை விளக்குவது.
ஆண்டவனுக்கோர்
புன்னகை—அடடா
இதை எங்கு காண்பது?
பார்க்கப் போறீரா இல்லை
சொல்லிக் காட்டுவதா?
சொல்லிக் காட்டுகிறேன்
நீவிர்
சென்று பார்த்திடுவீர்.
சென்று பார்த்திடுவீர் உங்கள்
குழந்தை உசட்டினை.
வந்து பார்த்திடுவீர்—நீவிர்
எங்கள் பலர் வனப்பை.

அ, டெஸ்மன் டிலான், சில்லாலை




## இறைவா நீ எங்கே...?...?

—வன்னி ஜெயம்—

★ பாருலகில் பாவியான்
பாடுகளால் பரிதவித்தேன்
வேதனைகள் தாங்காது
வெந்தணலில் வேகினேன்

★ உனையன்றி யெனக்கெவரும்
உறுதியாக என்றும்
உண்மைவழி காட்டாரென
இறுதியிலே உணர்ந்தேன்,

★ கார் முகிலுள் சென்றேன்
கர்த்தன உனைத்தேடினேன்
காரணனே உனைக்காணேன்
கருணாளா நீ எங்கே?

★ தீயினுள் சென்றேன்
தீயாக மாறினேன்
தீய என் குணமெல்லாம்
நீருக்கி விட்டேன்
நீருற்றுனை என்று பார்ப்பேன் ? — பாவ
நீறுகளை எப்போ கரைப்பேன் ?

★ நீரினுள் நின்றேன் — உனை
நீந்தியும் தேடினேன்.
நேசா உனையின்னும்
மேதினியில் காணேன்
இருந்தும்......

இறுதியாக உன்னையே
உறுதியாகத் தேடுகிறேன்
இறைவா நீ எங்கே...?
இறைவா நீ எங்கே...? ...?

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-26

அடைக்கலம்: பொதுநிலையினர் ஆண்டு எண்டு பெரிசா சொல்லினம் அண்ணை எங்களுக்கு என்ன வேலை தருகினம் சும்மா கோயிலுக்கு வாறது போறதோட தானே இப்பவும் நடக்குது.

குருசுமுத்தண்ணை: தம்பி அவையள் தந்த வேலை மட்டும்தான் எண்டிராமல் நீங்களும் நல்லதைக் கூடிச் செய்து பழக முன்வரவேண்டும்- அதை விட்டிட்டு சொன்னதைச் செய்யும் கிளிப்பிள்ளை மாதிரி காலத்தைப் போக்காம நல்லதைச் செய்ய நாலுபேர் கூடினால் எங் கட திறமையினையும் இந்தச் சமூகத்திற்குச் செய்யிறதில கிறிஸ்துவுக்குச் சாட்சி பகரலாம் எல்லே.

## இளைஞரும் நாடுகளும்

1. உலகம் இருப்பதே இளைஞர்களுக்காக.
— ஸ்லாவேக்கியா.
2. இளைஞர்களிடம கேட்டுப் பாருங்கள் அவர்களுக்கு எல் லாம் தெரியும்.
— பிரான்சு.
3. இளமை தூக்கத்துடன் தொடர்பு கொள்வதில்லை.
— கிரேக்கம்.
4. இளமையைப் பாராட்டிப் பேசினல் அது மேன்மை அடையும்.
— அயர்லாந்து
5. பெருமையுள்ள செயல் கள் பெரும்பாலும் இளைஞர் களாலே ஆற்றப்படுகிறது.
— இங்கிலாந்து.
6. இளமை நம்பிக்கைக்குரிய பருவம்.
— இங்கிலாந்து.

குழந்தை அன்புராஜ் முருங்கன்.




## 2. குடும்பச் சூழ்நிலை

குடும்பம் ஓர் அச்சு; பிள்ளை அதன் வார்ப்பு. குடும்பம் ஒரு மரம். பிள்ளை அதன் கனி. பெற்றோர் எவ்வழியோ அவ்வழியே பிள்ளைகளும்.

குழந்தைகள் இயல்பிலே களங்கமில்லா உள்ளம் கொண்டவர்கள்! கண்ணாடியின் முன் அழகிய பொருளை வைத்தால் அது கண்ணாடியில் அப்படியே அவ்வுருவத் தைப் பிரதிபலிக்கிறது. குப்பையை வைத்தால் குப்பையைத்தான் பிரதிபலிக்கிறது

அவ்வாறே குடும்பச் சூழ்நிலை சிறந்ததாக இருந் தால் அங்கு தோன்றி வளரும் குழந்தையும் சிறந்ததாக இருக்கும்.

குடும்பத்தில் பிஞ்சு உள்ளங்கள் காணும் முதல் தெய்வம் தந்தையும் தாயும். "அன்னையும பிதாவும் முன்னறி தெய்வம்" பெற்றோரின் சொற்கள்தான் தெய்வ வாக்கு. பெற்றோரைத் தவிர மற்றோரை இளங்குழந்தைகள் கண்டதல்லை. தந்தைதான் பலகல் ஆற்றல் படைத்தவர், தாய்தான் இவ்வுலகில் நேர்மை வாய்ந்தவள் என பிள்ளை திடமாக நம்புகிறது

செவிகளைவிடக் கண்கள் வழியாகத்தான் அதிக ஆற்றலோடு—குறிப்பாகக் குழந்தைகள் இதயத்தில்— கருத்துக்கள் பதிகின்றன இதனால், பெற்றோர் எவ்வழி நடக்கிறார்களோ அவ்வழியே தான் பிள்ளைகளும் நடப்பார்கள்.

தம் பிள்ளைகளைத் திருத்த வேண்டுமானால் முதலில் பெற்றோர் தம்மையே திருத்த வேண்டும்.

ஒரு தந்தை தன தனயனுக்குக் கற்றுத்தரும் ஆசிரியருடன் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந் தார். "ஐயா என் மகனுக்கு நல்ல ஒழுக்கம்தான தேவை. பொய், களவு, ஏமாற்று போன்றவற்றைத் தவிர்த்து நல்லவனாக அவன் உருவாக வேண்டுமென பதுதான் என் ஆசை" என்று கூறிக்கொண்டிருந்தார் அதேநேரத்தில் முதல் வகுப்பில் படிக்கும்தன் ஐந்து வயது மகனைச் சுட்டிக்காட்டி "இவனுக்கு ...ை... வயதுதான் ஆகிறது" எனச்சொல்லிக் கண்டக்டரிட மிருந்து டிக்கட் பெற்றுக் கொள்ளவில்லை.

தன் பிள்ளை களங்கமற்றவனாக வளர வேண்டு மென ஆசித்த போதிலும், தனது வாழ்க்கை ஏமாற்று வாழ்க்கையாக மாறிவிட்டதால் அவரது ஆசை நிராசையாகும் என்பதில் ஐயம் எதுவமில்லை.

கடன் கொடுத்தவன் வாசலில் நின்று தந்தையை அழைக்கிறான் அத்தந்தை தனயனிடம், "அப்பா வீட் டில் இல்லையெனச் சொல்லிவிடு" என ஆணை கொடுத்து அனுப்புகிறான். இத்தகைய பயிற்சியைப் பெற்ற மகன் அரிச்சந்திரனைப் போலவா வளருவான்? ஒரு சிறு சிரமத்திலிருந்தும் விடுபட பொய் எளிதில் சொல்லலா மென்ற தந்தையின் மனப்பான்மை இளகிய மெழுகில் பதிவதுபோல அப்பிஞ்சு உள்ளத்தில் பதிந்துவிட்டது.

மிட்டாய் வாங்க தந்தையிடம் பிள்ளை ஒரு ரூபா கேட்கிறது. உடனே, 'ஒரு சதம் கூட இல்லை' என்ற பதில் இடித்துக்கொண்டு வருகிறது. இரண்டு நிமிடத்தில் அந்த தந்தை அதே தனயனிடம் ஒரு பாக்கெட் சிகரெட் வாங்க ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுத்து அனுப்புகின்றான். தனது வழிகாட்டிகளான பெற்றோர் எளிதில் பொய் சொல்கிறார்கள் என்பதைப் பிள்ளை உணர்ந்துவிட்டது.

ஒரு மகன் பள்ளியிலிருந்து திரும்பி வரும்போது 'இந்தப்பந்து வரும் பாதையில் கிடந்தது' என்று சொன்னான். உடனே தாய் பதட்டத்தோடு அம்மகனைக் கண்டெடுக்கப்பட்ட பந்தோடு அழைத்துச் சென்று, விசாரித்து, உரியவர்க்குக் கொடுத்துவிட்டாள். உரிய வரைக்கண்டுபிடித்திருக்காவிட்டாலும் தர்மமாக ஒரு ஏழை சிறுவனுக்குக் கொடுத்திருப்பாள். இத்தகைய போக்கு எத்தகைய நல்ல பயிற்சியை அம்மகனுக்குத் தந்திருக்கும்!

சிறு பிள்ளை வீட்டுப் படிக்கல் தட்டிக் கீழே விழுந்து விட்டது. "ஓ"வென அலறி அழுகிறது. அழுகையை நிறுத்த தாய் வாசல்படிக்கு இரண்டு அடி கொடுத்துவிட்டுப். "படியை நன்றாய் அடித்துவிட் டேன். இனி அழாதேம்மா" என அன்புடன் ஆறுதல் கூறுகிறாள்.

'ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு' என்ற இயேசுவின் போதனை எங்கே? யாராவது தீங்கிழைத்தால் உடனே பழிக்குப் பழி வாங்க வேண்டு மென்ற பாடத்தைக் கிறிஸ்தவத் தாய் கற்றுக் கொடுத் துவிட்டாள்.

# அருள் வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம்

## பெரிய இறைவாக்கினர்கள்—4 த. பெ இல. 2, எரேமியாஸ்—I

ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

"பிடுங்கிப் பறிக்கவும்.
இடித்துத் தகர்த்தவும்,
அழித்து ஒழிக்கவும், கவிழ்த்து வீழ்த்தவும்,
கட்டி உயர்த்தவும், நட்டு வைக்கவும்,
மக்களினங்கள் மேலும். அரசுகள் மேலும்,
இதோ உன்னை ஏற்படுத்தியிருக்கின்றோம். (1: 10)

என்றுதான் இறைவன் தனது வார்த்தையைத் தான் தெரிந்து கொண்ட எரேமியாசுக்கு இறைவார்த்தையாக ஊட்டினார். இந்த ஊட்டத்தில் இருந்து பிறந்த வார்த்தைக் கனல்களே எரேமியாசின் இறைவாக்கில் தெறித்து நிற்கின்றன.

ஜெருசலேமுக்கு மூன்று மைல் வடக்கே உள்ள அனத்தொத் என்ற கிராமத்திலே. குருக்கள் வம்சத்திலுள்ள ஒரு ஏழைக் குடும்பத்தில் கி மு 650இல் எரேமியாஸ் பிறந்தார். தாயின் வயிற்றில் இருக்கும் போதே தேர்ந்தெடுக்கப்பட்டு இறைவாக்குரைக்க அர்ச்சிக்கப்பட்டார். தென் அரசை ஆண்ட புகழ்மிக்க அரசன் ஜோசியாஸ் காலத்தில் கி. மு 626இல் இவர் இறைவாக்குரைக்க அழைக்கப்பட்டார்.

"இறைவாக்கினன் எவனும் தனது சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை" என்ற கிறிஸ்துவின் வாக்கைக் கிட்டத்தட்ட 600 ஆண்டுகளுக்கு முன் வாழ்க்கையில் முழுமையாக அனுபவித்த இறைவாக்கினர் எரேமியாஸ். உள்ளத் தூய்மையுடனும் தனது மக்கள் மேல் கொண்ட அன்பின் நிமித்தமும் தான் நினைத்ததை ஒழிவு மறைவு இல்லாமல் பேசுவதில் புனித சின்னப்பருக்கு இணையாகின்றார் இவர்.

இறைவனின் கட்டளைப்படி (16:2) கடைசி மட்டும் பிரமச்சாரியாகவே இருந்த இவர். அரசன் ஜோசியாசின் இறப்பிற்குப் பின் (602) தனது மக்களாலும், உறவினராலும் யோவாக்கீம், சேதேசியாஸ், போன்ற அரசர்களாலும் துன்புறுத்தப்படுகின்றார் பின் எகிப்திற்கு அவர் எடுத்துச்செல்லப்பட்டு அங்கே கல்லால் எறியப்பட்டுக் கொலைசெய்யப்பட்டார் என யூத பாரம்பரியம் எடுத்துரைக்கின்றது.

அவருடைய இறைவாக்கின் ஆத்ம ராகத்தை அடுத்த இதழில் சுவைப்போம்!

இரா. ஞானசைநாதன்

அறிந்துகொள்ளுங்கள் 44

## புளியாத அப்பவிழா

நிசான்மாதம் பதினான்காம் நாள் மாலை பாஸ்காச் செம்மறியை உண்ணும் இரவிலே "அடுப்பில் சுட்ட இறைச்சியைக் காட்டுக்கீரைகளோடும், புளியாத அப்பங்களோடும் உண்பார்கள் (யாத் 12: 8) என்று யாத்திரையாகமத்தில் கூறப்படுகிறது. புளியாத அப்பங்களை ஏழுநாள் வரை உண்பீர்கள் (யாத் 12: 15)

ஆதி 12: 19-ம் வசனத்தில் ஏழுநாள் வரை புளிப்பு உங்கள் வீடுகளில் இல்லாதிருக்கக்கடவது பாஸ்கா விழாவிலே கசப்பான கீரையும், புளியாத அப்பமும் பயன்படுத்தப்படுகின்றன. இவையும் மிகப்பழைய விழாவாகும் உழவுத்தொழிலைப் பின்னணியாகக் கொண்டது பாலிவருவடையின் தொடக்கத்தில் கொண்டாடப்பட்டது இவ்விழாக் கானானியர்களிடமிருந்து வந்தது. இவை நாடோடிமக்கள் கொண்டாடியவிழா. காட்டிலே கசப்பான கீரைகள் கிடைக்கும் இன்னும் அங்கு அப்பம் விக்கவைத்துச் சுடமுடியாது. எனவே புளிக்காத அப்பம் சுட்டுச் சாப்பிட்டனர்.

மிகப் பழைய விழாக்களாகிய பாஸ்குவிழாவையும் அதாவது செமித்திய ஆயர் கொண்டாடும விழாவான பாஸ்காவையும், நாடோடிமக்கள் கானானியர் கொண்டாடி அவர்களிடமிருந்து கற்ற புளியாத அப்பவிழாவையும் இறைக் கட்டளையில் ஒன்று சேர்க்கப்பட்டு, மாற்றியமைக்கப்பட்டு எகிப்திலிருந்து இஸ்ராயேல்மக்கள் விடுதலையடைய வழிவகுத்த மாபெரும் நிகழ்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டன.

இவ்விழாவில் பயன்படுத்தப்படும் கசப்பான கீரை இஸ்ராயேல் மக்கள் எகிப்தில்பட்ட துன்பத்தைக் குறிக்கின்றது புளியாத அப்பம் இஸ்ராயேல் மக்களின் புறப்பாட்டை மன்னனும், மக்களும் துரிதப்படுத்தியதால் அவர்கள் ஆற அமர மாவைப் புளிக்கச் செய்து அப்பங்களைச் சுட்டுச்சாப்பிட முடியவில்லை. எனவே இது அவர்கள் எகிப்திலிருந்து துரிதமாகப் புறப்படுவதைக் குறிக்கின்றது.

இவ்விழா நினைவுகூரவேண்டிய நாளாகத் தலைமுறைதோறும் ஆண்டவருடைய திருவிழாவாகக் கொண்டாடவேண்டும். (யாத். 12: 14) எனவே யூதர்கள் ஆண்டுதோறும் தங்கள் விடுதலையின் நினைவாகப் பாஸ்காவிழாவைக் கொண்டாடினர். இவ்விழாவைக் கொண்டாடியபோது எல்லாம், மக்கள் தங்கள் கடவுளின் வலியகரத்தினால் தமக்குக் கிடைத்த விடுதலையை நினைவுகூர்ந்தனர்.

இ. ம. ஜெயசீலன்

## சமூக நீதிக்கோர் இறைவாக்கினர் ஆமோஸ்

இஸ்ராயேல் மக்களின் அநீதியான சமுதாயத்தை ஆமோஸ் கண்டார் யூத மக்களோடு இறைவன் செய்து கொண்ட உடன்படிக்கையில் ஏற்றத் தாழ்விற்கோ, பாகுபாட்டிற்கோ, சுரண்டலுக்கோ இடமில்லை கடவுளில் விசுவாசமும், மனிதரின் சகோதரத்துவமும் அவ்வுடன்படிக்கையின் அம்சங்கள். சமுதாய வாழ்வில் ஒருவரோடு ஒருவர் அன்புறவு கொண்டிருந்தால், உடன்படிக்கையின்படி இறைவனோடு அன்புறவு கொள்ள முடியும் என அறிவுறுத்துகின்றார். "நீதி தண்ணீரைப்போல் வழிந்தோடட்டும், நேர்மை நீரோடைபோலப் பாயட்டும்" (ஆமோஸ் 5 / 24) எனச் சமூக நீதிக்கு வழிகாட்டும் ஆமோஸ், "எளியவர்களை நசுக்கி நாட்டில் உள்ள ஏழைகளை ஒழிக்கத் தேடுகிறவர்களே இதைக் கேளுங்கள். நாம் தானியங்களை விற்பதற்கு அமாவாசை எப்பொழுது முடியும். ஓய்வு நாள் எப்பொழுது முடியும், முடிந்தால்கோதுமையை நல்ல விலைக்கு விற்கலாம். படியைச் சிறிதாக்கி, ஷெக்கல் நிறைய கள்ளத் தராசினால் மோசடி செய்யலாம், பணத்திற்கு ஏழைகளையும் ஒரு சோடி செருப்புக்கு எளியவர்களையும் வாங்கலாம், கோதுமைப் பதர்களையும் விற்கலாம் என்றெல்லாம் நீங்கள் ஏங்குகின்றீர்கள்" (8 / 4 -8) என மோசடி செய்பவரைச் சாடுகின்றார், எம்முறையிலோ பணத்தைச் சேர்த்து வைத்துக் கொண்டு, சோம்பியிருந்து, சுகபோகத்தில் காலம் கழிக்கும் செல்வந்தர்களை நோக்கி அவர் கூறுகின்றார். "சீயோனில் சுக செல்வமாய் வாழ்பவரே! பிரசைகளின் தலைவரான பிரபுக்களாயிருந்து இஸ்ராயேல் கூட்டங்களில் சிலாக்கிய ஆடம்பரத்துடன் பிரவேசிப்பவரே! உங்களுக்கு ஐயோ கேடு தந்தமிழைத்த மஞ்சத்தில் கண்சயனித்து சுக போகத்திற்காக நித்திரை போகிறவர்களே! கிடையில் கொழுத்த ஆட்டையும் மந்தையில் நிணக்கன்றையும் சாப்பிடுகிறவர்களே!...... இங்ஙனம் செய்யும் உங்களின் கூட்டமே அற்றுப்போகும் என்றார். (6: 1 - 7)

உலக இன்ப சுகத்தையே நாடி நிற்கும் செல்வச்சீமாட்டிகளை நோக்கி அவர் கூறுவார். "சமாரிய மலைமீது வாசஞ்செய்யா நின்ற நிணத்த பசுக்களே! இவ்வார்த்தைகளைக் கேளுங்கள். உங்கள் எசமான்களைப் பார்த்து; வாருங்கள் குடிப்போம் எனச் சொல்வோரே! காது கொடுங்கள்" (4: 1-3) என்று இறைவன் பக்கம் அழைக்கின்றார். நீங்கள் பாக்கியவான்களாய் வாழும்படி, தின்மையை அல்ல நன்மையைத் தேடுங்கள் அப்பொழுது சேனைகளின் நாயகரான ஆண்டவர் நீங்கள் சாதிப்பதுபோல் உங்களோடு இருப்பார்.. தீமையை அருவருத்து நன்மையை விரும்புங்கள் நீதிஸ்தலத்தில் நியாய தருமத்தை ஸ்தாபியுங்கள்" (5: 14-15) என்றார்.

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 2<br>சுடர்: 17 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

### அன்பு விழியின் அன்புக் குரல்:

புதிர்களுக்கான விடைகள் கண்டு மகிழ்ச்சியடைகிறேன், அதே வேளை விடைகள் பாடசாலை, வகுப்புகள் இன்றி வருவதைக் கண்டு கவலை கொள்கிறேன்.

பாடசாலை விட்டு விலகியவர், ஆண்டு 12, 13இல் கற்பவர் பெரியவர் பலரும் விடைகள் அனுப்பியுள்ளார்கள். உங்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

கௌரவ அங்கத்துவம்: 6 தொடக்கம் 11ஆம் ஆண்டு வரை கற்பவர் தவிர்ந்த மற்றவர்கள் கௌரவ அங்கத்துவம் பெறலாம் கௌரவ அங்கத்துவம் பெறவிரும்புவோர்: பெயர்; கற்பவராக இருந்தால் கற்கும் இடம், தொழில் புரிபவராக இருந்தால் தொழில் புரியும் முகவரி; வீட்டு முகவரி போன்ற விபரங்களைக் குறித்து அனுப்புங்கள். உங்கள் ஆக்கங்கள் காவலன் கண்மணிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும், ஊட்டமும் கொடுக்குமென நம்புகிறேன். நீங்கள் ஆவலுடன் காணக்காத்திருந்த விடைகள் இதோ.

"ஆ" பத்துக்கள்: (1) ஆண்டவன், ஆதிபகவன் (2) ஆதாம் (3) ஆங்காரம், ஆணவம் (4) ஆயுதம் (5) ஆசை (6) ஆத்திரம் (7) ஆகமனகாலம் (8) ஆன்மா (9) ஆக்கிரமிப்பு (10) ஆமென்

சிலுவைப்புதிர் (1) ஆண்டவர்(ரை), உண்மை
(2) பேருண்மைகள், அருள்
(3) புத்தகம், பத்தி

### அங்கத்துவம்

| அங் எண் | பெயர் | ஆண்டு | |
|---|---|---|---|
| 70 | பி. றெமிகுவிஸ்ரா | 8 | சில்லாலை றே. க. த க |
| 71 | செ. யேசுதாசன் | 11 | அரிப்பு றே. க. த.க. |
| 72 | ம. லீனஸ் பறுணந்து | 11 | அரிப்பு ,, |
| 73 | அ. எடிசன் | 8 | கருங்கண்டல் ,, |
| 74 | யே. ஜெறோம்ததேயுலெம்பட் | 9 | அரிப்பு ,, |
| 75 | யே. எட்மன் ,, ,, | 6 | அரிப்பு ,, |
| 76 | S. ஞானஒளி | 9 | உருத்திரபுரம் தி.கு.க ம. |
| 77 | Y. லூசியா | 8 | ,, ,, |
| 78 | பி மேரிதிரேசில்டா | 11 | யா/க. ம. ம. வி. |
| 79 | அ. அன்பரசி | 9 | மாவிலங்கேணிறே.க.த.க |
| 80 | வீ. அமலஜோதி | 10 | புங்கங்குளம் ம. வி. |
| 81 | பி றஞ்சிற்றூஸ்வோல்ட் | 11 | புனிதவளனார் அ. ம. தி. |
| 82 | ச. சவுந்தரி | 9 | யாழ். தி. கு. க.ம. |
| 83 | த குவின்ரன் இராசகுமார் | 8 | புதுக்குடியிருப்பு ம. வி. |
| 84 | A. மேரி பியட்ரா | 11 | சென்யேம்ஸ் பெ. பா. |
| 85 | வி. மேரிமாலா | 9 | இரணதீவு றே. க. த.க. |
| 86 | பா. ஜெயமதி | 11 | இரணதீவு றே. க. த.பா. |

### ஜெபியுங்கள் ஜெயம் பெறுவீர்

ஜேர்மனியப்படை பாரீஸ் நகருக்குள் நுழைந்துவிட்டது. லவால் நகரை முற்றிகையிட்டுவிட்டது. போன் மேன் நகருக்கு இன்னும் முப்பது மைல் மட்டும் இருந்தது. போர் அழிவுக்குள் பிரான்ஸ் சிக்கித் தவித்திருந்த வேளை........

1871ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் நாள் அன்னை மரி காட்சி கொடுத்தாள் சிறுவர்களுக்கு மட்டும் அன்னையின் அருள் வடிவம் அழகாகத் தெரிந்தது. மக்கள் அன்னையைக் காண அங்கு வந்தனர் ஜெபமாலை ஒலி ஒரு பக்கம் ஒலிக்க பீரங்கி ஒலி மறுபக்கம் ஒலித்துக் கொண்டிருந்தது. "என் ஆத்துமமானது ஆண்டவரை வணங்கித் தோத்திரம் பண்ணுகிறது" என்ற கீதம் காற்றினிலே கலந்தது. அன்னையின் திருவடியில் நீண்ட குறுகிய கொடி பட்டொளி வீசிப்பறந்தது. அக்கொடியில் "ஜெபியுங்கள் என் மக்களே கடவுள் சீக்கிரம் உங்கள் மன்றாட்டைக் கேட்பார். என் மகன் எளிதில் மனம் இரங்குபவர்" என்ற செய்தியைச் சிறுவர் படித்தனர்.

அன்னையின் காட்சியைக்கண்டு மக்கள் மனமாற்றம் பெற்றவேளை போரும் நிறுத்தப்பட்டது. அன்னையால் அந்நாடு காக்கப்பட்டது.

கரு: பூம்பொழில்
உரு: அன்பு விழி.

### உண்மை

உள் ள(த்) தின் தன்மை = உ(ள்) ண்மை
வாய் இன் தன்மை = வாய்மை
மெய் (உடல்) இன் தன்மை = மெய்மை
உள்ளத்தால் நன்மையே எண்ணுவோம்
வாயால் நன்மையே பேசுவோம்
உடலால் நன்மையே செய்வோம்
உண்மை யாய் நாம் வாழ்வோம்.

## உங்களுக்குத் தெரியுமா? போட்டி—17

பாதுகாவலன் பத்திரிகையில் (ஜுன்17—ஜுலை8) வினவுக்குரிய சரியான விடையைக் கண்டுபிடித்து வினு இலக்கத்தையும் சரியான விடையையும் தபால் அட்டையில் தெளிவாக எழுதி 1-8--88க்கு முன், பாதுகாவலன் அ. பெ. இல. 2 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். விடையும், பரிசுபெறுபவர் பெயரும், அடுத்த போட்டியும் 12-8-88-ல் வெளிவரும். பரிசு ரூபா 25/-

### வினுக்கள்

1. அ.ம.தி. சபை ஸ்தாபகரின் புரட்சிப்பணிகள் மூன்றும் எவை?
2. திருச்சிலுவைக்கன்னியரின் ஸ்தாபகரின் குறிக்கோள் என்ன?
3. உலகிலுள்ள கத்தோலிக்க ஆயரவைகள் எத்தனை?
4. ஆசாரத்துக்குரிய யோசவ் வாஸ் முனிவரின் சரிதையை பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்தவள் யார்?
5. தனது மோதிரத்தை முத்தம் செய்ய வந்த தாயின் மோதிரத்தை முதலில் முத்தம் செய்த திருத்தந்தை யார்?
6. ஆலயத் திருநாட்கள் களியாட்டங்களாக மாறுவது பற்றி எந்தத் திகதியன்று பாதுகாவலனில் கருத்து தெரிவிக்கப்பட்டது?

### போட்டி 16, சரியான விடைகள்

1. திரு உருவங்களின் வணக்கம் பற்றிய வாதம்.
2. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.
3. திரு. ஏ. சந்தியாப்பிள்ளை.
4. லத்தீன், சீரோ-மலபார், சீரோ-மலங்கரா.
5. 866.7 மில்லியன். (8667 லட்சம்)
6. முஸ்லீம்கள்.

### சரியான விடை எழுதியோர்,

1. யாழ்ப்பாணம் ஆன் அகஸ்ரின்,
2. புங்குடுதீவு அமிர்தராசா ரூபியா,
3. சென். ஜேம்ஸ், இளவாலை மைக்கல் கொலின்ஸ்.
   ஜே. ஜோண்ஸ்ரன், அகஸ்ரின் யூட் அல்வின்.
   யே. கிறிஸ்ரி போல்.
4. இரணைதீவு ப. மேரி மார்கிறேட்.

**பரிசு பெறும் நற்பேறுளர்;**

ஆன் அகஸ்ரின், யாழ்ப்பாணம்.

## இறை அழைத்தல்

**வீரமிக்க இளைஞனே!**

அன்னை மரியின் அடிச்சுவட்டில்
ஆண்டவர் யேசுவின் பணியை
செப வாழ்வின் மூலம் ஆற்ற

**ஓர் அன்பின் அழைப்பு**

மாறிவரும் இச் சமுதாயத்தில் இறையழைத்தலை ஒருசவாலாக ஏற்று குருவாகவோ, சகோதரராகவோ பணிபுரிய அழைக்கிறது

**செபமாலைத்தாசர் சபை**

தொடர்பு கொள்க :

| | |
|---|---|
| Rev. Fr. Director | அதிபர் |
| Arul Ashram | அருள் ஆச்சிரமம் |
| 5, Temple Road | கோவில் வீதி, |
| Jaffna | யாழ்ப்பாணம் |

A/82

## புனித அன்னை ஆலுள் திருவிழா

**வங்காலை**

**26-07-1988**

வங்காலையில் கிருபாசனங் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற புனித அன்னை ஆலுளின் திருவிழாவுக்கான நவதின வழிபாடுகள் 17-07-88 ஞாயிறு வாரம் மாலை 06 மணிக்கு ஆரம்பமாகி 25-07-88 மாலை நற்கருணை வழிபாடு பவனியுடனும், 26-07-88 காலை 07 மணிக்கு பாடற் திருப்பலியுடனும் அன்னையின் திருச்சுரூபப் பவனியுடனும் நிறைவுறும்.

திருவிழா நவதின வழிபாடுகளை யாழ். மறை மாவட்டத்தில் இறைபணி புரியும் அருட்திரு நீக்கிலாஸ் அ. ம. தி. அடிகளார் அவர்கள் நெறிப்படுத்தி மறையுரை நிகழ்த்துவார்கள்.

பக்தர்கள் அனைவரையும் அன்னையின் அருளைப்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குத் தந்தையும், பங்குமக்களும்

வங்காலை
15-07-88 A/83

## இவ்வாரப் புனிதர்கள்

ஜுலை 21 பிரின்டிசி புனித லோரன்ஸ், குரு.
ஜுலை 22 புனித மரிய மதலேனம்மாள்.
ஜுலை 23 புனித பிரிஜித்தம்மாள்.

## உறுதிப்பூசுதல் பெற்றபின் நான் ஒரு....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரையே தியாகம் செய்தனர். பரிசுத்த ஆவியானவர் அவர்களில் செயற்பட்டதே அவர்களின் திடத்திற்குக் காரணமாகும். ஏனெனில் தூய ஆவியானவரின் வழியாக அவர்கள் உறுதிப்பூசுதலைப் பெற்றுக் கொண்டனர்.

பரிசுத்த ஆவியானவர் நாம் அன்பு செய்யும் கடவுள்; எம்மைப் புனிதர்ஆக்கும் கடவுள்; உண்மைக்குச் சான்று பகர நாம் பெற்ற அழைப்புக்குத் துணிவுடன் விடைஅளிக்க எம்மிடம் வரும் கடவுள். இந்த ஆவியானவர் எங்களிலேயும் செயலாற்றுகின்றார். சிறப்பாக உறுதிபூசுதல் என்னும் திருவருட்சாதனத்தால் நாம் திடம் என்னும் கொடையைப் பெறுகின்றோம். அப்போது தான் உண்மையான கிறிஸ்தவ வாழ்வுக்குச் சான்று பகரும் தகைமையைப் பெறுவோம். கிறிஸ்துவுக்கும் பரம அன்புக்கும் உண்மைக்கும் சான்று கூறுபவர்களாக விளங்க தூய ஆவி உறுதிபூசுதல் வழியாக எம்மில் செயலாற்றி எம்மைக் கிறிஸ்தவ போர்வீரனாகத் தைரியப்படுத்துகின்றார்.

இதனாலேயே கலாத்தியருக்கு புனித சின்னப்பர் கூறியபடி "ஆவியின் ஏவுதலின்படி நடவுங்கள் அப்போது இயல்பின் இச்சைகளை நிறைவேற்ற மாட்டீர்கள் தேவ ஆவி அளிக்கும் பலன்களாவன: அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், விசுவாசம், சாந்தம், தன்னடக்கம்"(கலாத்தியர் 5: 16, 22-23) என்று விளக்கப்பட்டுள்ளது. அதே தூய ஆவியானவரே அப்போஸ்தலர்களின் வழிவந்தவர்களைத் தொடர்ந்தும் வழி நடத்துகின்றார். அவர்களைப் பாதுகாத்துத் தேவையான அருள்களை அளிக்கின்றார். பாப்பானவர், ஆயர், குருக்கள் என்போர் விசுவாசிகளைப் புனிதப்படுத்துவதற்கு வேண்டிய திடத்தைக் கொடுக்கின்றார். மக்களுக்கு அறிவூட்டி வழிநடத்தும் பணியில் ஒரு போர்வீரனாகச் செயற்படும்படி தூய ஆவி அவர்களை ஆள்கின்றார்.

ஒவ்வொரு அருட்சாதனங்களும் வெளியடையாளங்களையும், வார்த்தைகளையும் கொண்டுள்ளன. இவை உள்ளே பொழியப்படும் அருள்களைக் குறிக்கின்றன. ஏற்கனவே திருமுழுக்கு, பாவசங்கீர்த்தனம், தேவநற்கருணை என்ற மூன்று அருள் வரப்பிரசாதங்களைப் பெற்றுள்ளோம். எமது நாட்டு வைத்தியர்கள் மருந்துகளுக்கு எண்ணை பயன்படுத்துகிறார்கள். எண்ணை பலத்தைக் கொடுக்கின்றது. இதே போல் ஆன்மாவுக்கும் பலம் தேவைப்படுகிறது. நாம் வளர்ந்து வருகின்றோம், புதிய பொறுப்புக்கள் எமக்குண்டு; புதியபிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளோம்; இவை அனைத்தையும் மேற்கொள்ள பரிசுத்த ஆவியின் அருள் எமக்குக் கட்டாயம் தேவை. அந்த அருளை நிறைவாகப் பெற எமக்கு உதவும் திருவருட்சாதனம் உறுதிப்பூசுதல் ஆகும். இதனைப் பெறுவதற்கு தகுந்த ஆயத்தங்கள் செய்யப்பட வேண்டும். புதிதாகச் சேரும் போர்வீரன் உடனே செயற்படுவதில்லை அவன் பயிற்றப்படுகின்றான். அதுபோலவே உறுதிப்பூசுதல் பெற நன்றாகப் பயிற்சி பெறவேண்டும்.

எனவே அன்று அப்போஸ்தலர்களைப் போல அன்றைய திருச்சபையைப்போல, அன்றைய இராயப்பரைப்போல இன்று நாம் உறுதிப்பூசுதல் வழியாக ஒரு அப்போஸ்தலனாக; ஞானப்போர்வீரனாகச் செயற்படுவோமாக. அவர்கள் வாள், தடிகளை ஏந்திப் போர்வீரனாகச் செயற்படவில்லை. நாமும் தூய ஆவியை வாளாகவும், கிறிஸ்துவின் வாழ்க்கை முறைகளை ஆயுதமாகவும் பயன்படுத்திக் கெட்ட எண்ணங்களாகிய பகைவரை அழித்து எவ்வித துன்பங்கள் மத்தியிலும்; எவ்வித இடையூறுகள் மத்தியிலும்; துப்பாக்கி முனைகளுக்கு முன் எம்மை விட்டபோதும் நாம் இனிக் கிறிஸ்தவ ஞானப் போர்வீரனாகத் தயங்காது அவர் நற்செய்தியை அறிவிப்போமாக. ஏனெனில் நாம் உறுதிப்பூசுதல் பெற்றுவிட்டோம்.

## ஓராண்டு நினைவஞ்சலி



M. E. அரசநாயகம்

தோற்றம்: 06-05-1935 மறைவு: 20-07-1987

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் என்றும் எமக்காய் வாழ்ந்த தந்தையே உங்கள் பிரிவால் வாடும் எங்களுக்காய் விண்ணுலகில் வேண்டிடுவீர். இறையடியில் மறைந்து ஓராண்டு கழிந்தாலும் எம்மவர் நினைவில் என்றும் நீங்கள் மறந்ததில்லை உயிருள்ளவரை உங்களை மறவோம். இறைவனோடு ஒன்றித்து இன்ப சாந்தி பெற்று அமைதி பெற அன்புடன் வேண்டுகின்றோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 20-07-88 புதன்கிழமை மாலை 5 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலஸ் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்.

மிருசுவில், A/84

சில்லாலை

திருமதி ஔறெலியா
விருஸ்பிள்ளை

### அவர்களின் மறைவின் 25ஆவது ஆண்டு நினைவு

எங்களால் மறக்க முடியாதவாறு எம்மை அன்பு செய்து அருமையாய் வளர்த்த அன்புத்தாய் எம்மைப் பிரிந்து 25 வருடங்கள் மறைந்துவிட்டன. வரும் 21-7-88 அன்று, எமது பரலோக அன்னை, யாத்திரைக் கன்னி, எமது இல்லத்தைச் சந்திக்க வரும்வேளை, எமது பெற்ற தாய்க்காக அந்நாளை வழிபாட்டுநாளாக வைத்து, பரிசுத்த தாயை வாழ்த்தி வேண்ட எம் அன்புக்குரியவர்களை அழைக்கின்றோம்.

செல்வி அகத்தம்மா
விருஸ்பிள்ளை
பண்டத்தரிப்பு

A/78

ஊக்குவியுங்கள்

### வாசகர்களே,

பாதுகாவலன் பத்திரிகையை உங்கள் நண்பர்களுக்கு அறிமுகப் படுத்துங்கள். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்." நீங்கள் அறிமுகப் படுத்தாமல் எப்படி மற்றவர்கள் அறியமுடியும். மறைவட்டத்திலுள்ள அனைத்துக் கத்தோலிக்க குடும்பங்களும் வாரம் தவறாது பாதுகாவலன் வாசிக்கப் பழகிக்கொள்ள நீங்களே துணைபுரிய வேண்டும்.

## சந்தியோகுமையோர் திருநாள்

**இளாலி**

17ஆம் திகதி முதல் தினமும் மாலை 5-00 மணிக்கு ஆயத்த வழிபாடுகள் இடம் பெறும்.

24-7-88—மாலை 5-00 மணி—நற்கருணை ஆராதனை.
25-7-88—காலை 6-30 மணி—திருநாள் திருப்பலி.

ஆலய வளவில் யாத்திரிகர்கள் தங்குவதற்கு அனுமதிக்கப் படமாட்டார்கள்.

யாத்திரிகர்களின் வசதிக்காக அருகிலுள்ள ஆலயங்களில் மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பங்குத் தந்தை.

## 'எம் கருத்து'க் குறள் தெளிவுரை

அன்புடன் தொன்று தொட்டு வந்த உறவை உடையவர், அழிவு தரும் செயல்களைப் பழகியவர் செய்தபோதிலும் தம் அன்பு நீங்காமலிருப்பர்.

பாதுகாவலன்
PATHUKAVALAN

## பொதுநிலையினர் கருத்தரங்கு

உயிலங்குளம் பங்கில் பொது நிலையினருக்கான கருத்தரங்கு 26-6-88 அன்று மன்னார் மறைவட்ட குரு முதல்வர் அருட்திரு. சேவியர் குரூஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கை பொதுநிலைப் பணியாளர்களான பெஞ்சமின், கீதபொன்கலன், மரியதாஸ், ஆசிரியர் அந்தோனிப்பிள்ளை, மற்றும் சகோதரி மரிஞ ஆகியோர் நடாத்தினுர்கள்.

பங்கின் வழிபாட்டுக் குழு தலைவர் திரு. ம. சவிரி அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து குரு முதல்வரின் தலைமையுரையோடும் சிறு செபத்துடனும் கருத்தரங்கு நடைபெற்றது. முதலில் தியான வழிபாடு சகோ. பெஞ்சமின் அவர்களால் நடாத்தப்பட்டதையடுத்து உண்மை செபம் எவ்வாறு அமையவேண்டுமென்பதை சகோ. கீதபொன்கலன், சகோ. மரியதாஸ் ஆகிய இருவரும் கலந்துரையாடல் மூலம் தெளிவு ...த்தினுர்கள். இதனையடுத்து குரு முதல்வர் திருச்சபையின் மறுமலர்ச்சி, பொதுநிலையினரின் ஆன்மீகம் என்ற தலைப்புக்களில் உரையாற்றினுர். சகோதரி மரிஞ அவர்கள் திருப்பணியாளர்களின் உரிமை, கடமை பற்றித் தெளிவாக எடுத்துக் கூறினுர்.

மத்திய இடை வேளையின் பின்பு ஆசிரியர் அந்தோனிமுத்து அவர்கள் பொதுநிலையினரின் ஆன்மீகம் எவ்வாறு இல்லற வாழ்வில் செயல்படுத்தப்படவேண்டும் என்பது பற்றி நடைமுறை உதாரணங்களுடன் விளக்கினுர். சகோ. பெஞ்சமின் அவர்கள் "அருள் நிறை மரியே வாழ்க" என்ற தலைப்பில் இறுதியுரை நிகழ்த்தினுர். ஈற்றில் பங்குத்தந்தை அருட்திரு. ஸ்ரனி அன்ரனி அ. ம. தி. அவர்களின் நன்றி உரையுடனும் மரியாளுக்கு பஜனைப் பாடலைப் பாடியதோடு கருத்தரங்கு இனிதே நிறைவுற்றது. இக் கருத்தரங்கில் 11 துணைப் பங்குகளிலுமிருந்து ஏராளமான பொதுநிலையினர் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

தகவல்: S. பிரபா
முதலை குத்தி

## கிளிநொச்சி மறைவட்டாரக் கியூறியா

" இன்று கிளிநொச்சி மறைவட்டாரத்திற்கு மகிழ்ச்சி நிறைந்த நாள். ஐந்தாவது கியூறியாவாக கிளிநொச்சி மறைவட்டாரக் கியூறியாவை நாம் இன்று அமைக்கிறேம்," என மேற்படி கியூறியாவின் அங்குரார்ப்பண விழாவில் யாழ் கொமிற்சியத் தலைவர் மோ — தார்சீசியஸ் குறிப்பிட்டார்.

மேற்படி விழா 25-6-88 இல் கிளிநொச்சி புனித திரேசா ஆலய முன்றலில் காலை 9.00 மணிக்கு நடைபெற்றது. கியூறியா ஆன்ம இயக்குநர் அருட்திரு P. இருதயதாஸ் அடிகள், "கிளிநொச்சி மறைவட்டாரத்தின் நீண்ட நாட்கனவு இன்று நனவாகின்றது. இதன் மூலம் சேனை துரிதவளர்ச்சி அடைய மூடியும்" என்றுர் அருட்திரு ஜெரூட் அடிகள் உரையாற்றுகையில், சேனையின் நிருவாகத்தைப் பரவலாக்குவதன் மூலம் சேவையில் உற்சாகத்தையும் உறுதிப்பாட்டையும் காணமுடியும்" என்றுர்.

பின்னர் இடம் பெற்ற அலுவலர்கள் தெரிவில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர் :- சகோ. (திருமதி) அருட்சோதி செல்வநாயகம் துணைத்தலைவர் .- சகோ திருமதி) மேரியோசேப்பின் ஞானராஜ் செயலர் :- சகோ (திருமதி) றெபேக்கா எட்வேட் பொருளர் :- சகோ (திருமதி) இருதயமேரி ஐயாசாமிப் பிள்ளை.

இக்கியூறியாவின் தொடர்பு சகோதரராக N. இராயப்பு 29.6.88 இல் நடை பெற்ற கொமிற்சியக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டார்.

மோ. தார்சீசியஸ்
யாழ். கொமிற்சிய தலைவர்.

## யாழ். கொமிற்சிய வெளிவிழா

(சென்றவாரத் தொடர்ச்சி)

தூர இடங்களிலிருந்து சிரமங்களைப் பொருட்படுத்தாது சேனையார் முழுமையாகப் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் யாழ். கொமிற்சிய ஆன்ம இயக்குநர் அருள்திரு.A.C.கிறிஸ்தோப்பர் பேராலயப் பிரசீடியங்களின் ஆன்ம இயக்குநர் அருள்திரு. R. ஸ்ரலின் மண்டைதீவு, அல்லைப் பிட்டிப் பிரசீடியங்களின் ஆன்ம இயக்குநர் அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை, கரம்பன் பிரசீடியம் சார்பில் அருள்திரு. A. சிங்கராயர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வெளி விழா, சாட்டி புனித சித்தாத்திரை மாதா திருப்பதியில் நடந்தேறியது. அன்னையின் அருட்பதியிலே ஆரம்ப செபத்துடனும் செபமாலையுடனும் விழா ஆரம்பமாகியது. கொமிற்சியத் தலைவரின் வரவேற்புரையைத் தொடர்ந்து, அங்கு சமூகமளித்திருந்த அனைத்து அங்கத்தவர்களினதும் அறிமுகம் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து மகிழ் ஊட்டும் இனிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. மதிய இடைவேளையின்போது யாவரும் கடற்குளிப்பில் கலந்து மகிழ்ந்தார்கள். இதனைத் தொடர்ந்து மதிய போசனம் இடம் பெற்றது. மதிய போசனத்தின் பின்னரும் பிரசீடிய நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. இந் நிகழ்ச்சிகளில் அனைத்துச் சேனையாரும் வயது வித்தியாசமின்றி உற்சாகமாகவும், உள்ளன்போடும் பங்கு கொண்டமை கண் கொள்ளாக் காட்சியாகும்.

அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் சிகரமாக அருள்திரு. R. ஸ்ரலின் அடிகளாரால் பலிப்பூசை நிறைவேற்றப்பட்டது. மறையுரையின்போது வெளி விழாவின் நோக்கம் பற்றியும், சேனைச் சேவை பற்றியும் எடுத்துரைத்தார்.

முடிவுச் செபத்துடனும் மரியன்னையின் புகழ்ப்பாக்களுடனும் விழா நிறைவெய்தியது.

மோ - தார்சீசியஸ்'
யாழ். கொமிற்சியத் தலைவர்.

## குருப்பட்டம்



தேத்தாப்பளை புனித செபஸ்தியார் பங்கைச் சேர்ந்த காலஞ்சென்ற செபமாலை சேனுதிபதி திருமதி அக்கினேஸ் தம்பதிகளின் புதல்வரான அருட்சகோதரன் செபஸ்ரியன் அவர்கள் தமது ஆரம்பக் கல்வியைத் தேத்தாப்பளை றேமன் கத்தோலிக்க பாடசாலையிலும், உயர் கல்வியைச் சிலாபம் புனித மரியாள் கல்லூரியிலும் பயின்று மாரவில்லையிலுள்ள புனிதர் சின்னப்பர் குருமடத்தில் இணைந்து களுத்துறை 'தகம்செவண' இல் தமது குருத்துவக் கல்வியை ஆரம்பித்து, கண்டி தேசிய குருமடத்தில் மெய்யியலையும், இறையியலையும் கற்றுத் தேறினுர். அருட்சகோதரர் தியாக் கோணுக போளவத்தைப் பங்கிலும், புத்தளம் பங்கிலும் பணிபுரிந்தார்,

நிகழாண்டு ஆடித்திங்கள் 23 ம் நாள் சனிக்கிழமை காலை 9.00 மனிக்கு சிலாபம் பேராலயத்தில் சிலாப ஆயர் அதி வணக்கத்திற்குரிய பிராங் மார்க்கஸ் பர்ணுந்து ஆண்டகை அவர்களால் அருட் சகோதரர் செபஸ்ரியன் அவர்கள் குருவாகத் திருநிலைப் படுத்தப்படுவார். இவர் தமது முதற் திருப்பலியை ஆடித் திங்கள் 24 ம் நாள் ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு தேத்தாப்பளை புனிதர் செபஸ்தியார் ஆலயத்தில் ஒப்புக் கொடுப்பார்.

## பாடசாலையில் மரியன்னையின் ஆண்டு நிகழ்ச்சி

பண்டிவிரிச்சான், பெரியகட்டு, செட்டிகுளம், வவுனியா, ஓமந்தை ஆகிய பங்குகளின் பங்குத்தந்தையர்கள் ஐவரும் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு பங்கின் பாடசாலைகளைச் சந்தித்து மாணவர்கட்குசிறந்த உரைகளை ஆற்றி மரியன்னையின் ஆண்டின் அர்த்தத்தையும் அன்னைக்கும் அவரது பிள்ளைகளாகிய எமக்கும் இடையே உள்ள உறவையும் எடுத்துக் காட்டினர்.

ஆனி 20இல் பண்டிவிரிச்சான் பாடசாலை மாணவர்கட்கும் ஆனி 21 இல் பெரியகட்டுப்பங்கிற்கும் ஆனி 22 இல் செட்டிகுளப் பாடசாலை மாணவர்கட்கும் ஆனி 23 இல் வவுனியாவிலும் ஆனி 24 இல் ஓமந்தைப் பங்கிலும் நடாத்தப்பட்டன. வவுனியாவில் முதலாவது ஒன்று கூடல் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் அவ்வித்தியாலய மாணவிகட்கும், அயற்பாடசாலை மாணவ மாணவிகட்கும், இரண்டாவது ஒன்று கூடல் வவுனியா மகா வித்தியாலயத்தில் அவ்வித்தியாலய மாணவ மாணவிகட்கும் நடத்தப்பட்டன.

ஒவ்வொரு ஒன்று கூடலும் சிறிய வழிபாட்டோடு ஆரம்பமாகியது. வழிபாட்டை அடுத்து ஒன்று கூடலின் சிறப்பு அம்சங்களான இரண்டு உரைகளும், தொடர்ந்து கலந்துரையாடலும் இடம் பெற்றன. இறுதியில் ஐந்து குருக்களும் வழங்கிய பொது ஆசீரோடு நிறைவுபெற்றது. இவ்வொன்று கூடல்கள் மூலம் மாணவர்கள் பெரும் பயன் அடைந்தார்கள். அவர்கள் உள்ளங்களில் மறைந்திருந்த ஐயப்பாடுகள் நீங்கின.

தகவல்:
திமருதி V.R.A. ஒஸ்வெல்ட்.

## வத்திக்கான் நகரில் அன்னை திரேசாவின் இல்லம்

திருத்தந்தை 2-ம் அருள் சின்னப்பர் அன்னை திரேசாவின் அன்புச் சகோதரிகள் நடத்தவிருக்கும் வறியோர் இல்லமொன்றை மே 22ம் திகதி ஆசிர்வதித்தார். இந்த இரண்டுமாடிக் கட்டிடத்தில் 70 பேர் தங்கக்கூடிய வசதியும், 100 பேருக்கு உணவு தயாரிக்கக் கூடிய ஒரு சமயலறையும் உண்டு.

இந்தியாவில் இக்கன்னியருக்கு 156 இல்லங்கள் உள்ளன. அனுதை இல்லங்கள், தீரா நோயாளர் இல்லங்கள் தொழுநோயாளர் நிலையங்கள், வயோதிபர், அங்கவீனர், சித்தசுவாதீனமற்றேர் இல்லங்கள், நடமாடும் சிகிச்சை நிலையங்கள், இலவச உணவுச் சாலைகள், இரவு தங்குமிடங்கள் ஆகியவை இவர்களால் நடத்தப்படுகின்றன.

தற்போது இக்கன்னியர்களுக்கு 71 நாடுகளில் 351 இல்லங்கள் உள்ளன. 1988ல் அன்னை திரேசா சோவியத் ஒன்றியம், சீனு, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளிலும் உள்ள ஏழைகளுக்கு தன் சேவையை விஸ்தரிக்க எண்ணியுள்ளார்.

77 வயதான அன்னை திரேசா சென்ற மாதம் லண்டன் நகரில் ஓர் இல்லத்தை நிறுவுவதற்காக பிரதமர் மாகிறட் தட்சரின் உதவியைக் கோரியுள்ளார்.

## விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன் அ. சுரேஸ்நாதன்
அன்னை மடியில்: 20-07-1968
இறைவன் அடியில்: 20-06-1988

அன்பின் உருவாய் அனைவர்க்கும் இனியவராய் பண்பின் சிகரமாய் பாசத்தின் ஒளிவிளக்காய் விளங்கி எங்கள் உள்ளத்தை விட்டு மறக்கவும் மறைக்கவுமியலாத அமிர்தநாதன் சுரேசின் பாவங்கள் அனைத்தையும் பொறுத்து நித்திய ஒளியில் பிரகாசிக்கச் செய்தருளும்.

உன் பாவங்கள் பொறுக்கப் பட்டன.
உன் விசுவாசம் உன்னை மீட்டது.
சமாதானத்துடன் போ.

என்ற வார்த்தையை இவரிடத்தில் பேசியருளும் ஆண்டவரே.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 20-07-1988 காலை 10 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் இரங்கற் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப் படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
தந்தை தாய், சகோதரர், உறவினர்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு யூலைமாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னேடிருக்கிறேம் என்கிறர் ஆண்டவர்